# விடுதலைப்புலிகள்

குரல்: 66 | 1-15 வைகாசி 1996 | அன்பளிப்பு: 5/=


உள்ளே


* கலைஞருக்கு வாழ்த்து
* 'ரிவிரெச 2' உம் புலிகளும்
* இந்தியாவின் உண்மை முகம்
* குடாநாட்டுக்குத் தரைப்பாதை
* விதையும் விருட்சமும்
* புலிகள் சேனை கொடிகள் ஏற்றும்.


**புதிய அரசிற்கு தமிழீழ மக்களின் கோரிக்கை**

# புலிகள் தொடர்பான கொள்கையில் இந்தியாவிடம் மாற்றம் வேண்டும்!

## தமிழீழ மக்கள் இந்தியாவின் நட்புறவுச் சக்தியே

**நடந்துமுடிந்துவிட்ட இந்திய நாடாளுமன்றத் தேர்தலை அடுத்து, புதிதாக ஆட்சியமைக்கும் நடுவண் அரசு, ஈழத் தமிழரின் தேசிய நலனைப் பேணும் வகையிற் தனது வெளியுறவுக் கொள்கையில் அடிப்படையான மாற்றங்களைக் கொண்டுவரவேண்டும்.**

**தமிழீழ மக்களின் போராட்டச் சக்தியான விடுதலைப் புலிகளுடன் அது நட்புறவை வளர்த்துக் கொள்ள வேண்டும்.**

**பாரதத்தின் நேசசக்தியாக வரலாற்றுக்காலம் தொடக்கம் ஈழத் தமிழினம் இருந்து வருகின்றது என்ற சரித்திர உண்மையைப் புதிய அரசு புரிந்து கொள்ள வேண்டும்.**

இந்திய நடுவண் அரசிலும், தமிழ்நாடு மாநில அரசிலும் ஆட்சி மாற்றங்களை உண்டுபண்ணும் வகையில் தேர்தல் முடிவுகள் அமைந்துவிட்டன.

தமிழ்நாட்டின் மாநிலச் சட்டசபையில் ஓர் உறுதியான அரசும், மத்தியில் தொங்கு நாடாளுமன்றத்தைக் கொண்ட ஒரு கூட்டரசும் அரியணை ஏறியுள்ளன.

தமிழ்நாட்டிலும் - டெல்லியிலும் அதிகாரத்தில் இருந்த முன்னைய அரசாங்கங்கள், ஈழத்தமிழரின் நலன்கள் தொடர்பாக, பாதகமான கொள்கைகளையும், பகைமை ரீதியிலான அணுகுமுறைகளையும் கடைப்பிடித்து வந்தன.

ஆண்டாண்டு காலமாகப் பாரதத்தின் நட்புச் சக்தியாக இருந்த ஈழத் தமிழினத்திற்கு, இவை அதிர்ச்சியையும், வேதனையையும் கொடுத்திருந்தன.

ஆனால், இப்போது, தமிழ்நாட்டிலும், டெல்லியிலும் நடந்துள்ள ஆட்சிமாற்றங்கள், தமிழீழ மக்களுக்குப் புதியதொரு தென்பை ஊட்டியுள்ளன. →



## எனது மக்களே எனது குகைகள்

என் ஊரில்
இப்போது
காக்கி உடைப் பேய்களின்
நிர்வாகம்!

துப்பாக்கிகளின் ஆளுகை!

சிங்கக் கொடி நட்ட
சிலிர்ப்பில்
எங்கும் உலாவுகிறான்
பகைவன்.

எல்லாம் முடிந்ததென்ற
இறுமாப்போ?!
நடக்கட்டும்.

நாங்கள் 'பீனிக்ஸ்'சுகளல்ல;
விடுதலைப் புலிகள்!

சாம்பராக்குவதே
சாத்தியமற்றது.

சிங்களம்
கூடாரமடித்துவிட்ட
எம் கிராமங்களில்
புரட்சியின் உயிர்த்துடிப்பாய்
மீண்டும் நான்.

எதிரியின் நெற்றிப் பொட்டில்
போர் முரசறைந்து
பிரபாகரனின்
படைவீரனென
இனி நிமிர்வேன்.

நெஞ்சுக்குள் அசரீரிக்கும்
அந்த வழிகாட்டல்.

நான் நிழலாய் உலவ
என் செயல்களே
நிஜங்களாய் முழங்கும்

வெற்றிச் செருக்கேறிய
பகைத் தளபதியின்
நிம்மதித் தூக்கத்தில்
என் காலடியோசைகள்
இடிகளாய் அதிரும்.

சிங்களச் சிப்பாய்களின்
கனவுகளில்
என் அசைவுகள்
உறுமலாய் எதிரொலிக்கும்.

''அமைதி'யைப் படைக்கப்
''போர்'' தொடுத்து வந்த
விசித்திரமானவர்கள் -
அமைதியைத்
தொலைத்து விட்டு
அல்லற்படுவார்கள்.

தன்னால்
''வெல்லப்பட்ட'' மனங்களின்
கொல்லைப் புறங்களிலேயே
நான் உறங்குவதை
அவன் எப்படி அறிவான்?

எமது மக்களே
எனது குகைகள்

'மரணம் வரவேற்கும்
முற்றுகையின் இறுக்கத்தில்
இறகிடுக்குகளுக்குள் மறைத்து
அவர்கள்
என்னை மீட்பார்கள்

படைவண்டிகளின் கர்ச்சனை
நிசப்தத்தை உடைக்கும்
இரவுகளில் -
தலைகோதி என்னை
தூங்கவிட்டு
அன்னையர்கள்
ஏக்கத்தோடு
விழித்திருப்பார்கள்

புரட்சியைக் காக்கும்
புனிதப் பணியாய்
எம் மக்கள்
என்னைக் காப்பார்கள்!

எனக்கு
எதற்கும் பயமில்லை!

கிளறியெறியப்பட்ட
கல்லறைகளின்
புழுதியில் கலந்து -
என்னுயிர்த் தோழர்கள்
காற்றில் மிதப்பார்கள்.
அவர்களையே சுவாசித்து
என் பணி தொடர்வேன்.

- தி. இனியவன்


தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

## புலிகளின் குரல்

# "தானாடா விட்டாலும் தசை ஆடும்"

கலைஞர் கருணாநிதியின் தலைமையிலான தி. மு. கழகம் – அறுதிப்பெரும்பான்மைப் பலத்துடன் – தமிழ்நாட்டின் ஆட்சியை மீண்டும், கைப்பற்றி உள்ளது. புதுடில்லியில் அமைந்துள்ள தொங்கு நாடாளுமன்றில் செல்வாக்குச் செலுத்தும் அளவுக்குக் கணிசமான நாடாளுமன்ற ஆசனங்களையும், கலைஞரின் கட்சி பெற்றுள்ளது. தி. மு. கவின் அரசியல் வரலாலற்றைப் பொறுத்தளவில் இது ஒரு சரித்திரப் பிரசித்திபெற்ற தேர்தல் வெற்றியாகும்.

தி. மு. க. பெற்றுள்ள இந்த மாபெரும் வெற்றி ஈழத்தமிழர்களுக்கு மகிழ்ச்சியையும், நம்பிக்கையையும், கொடுத்துள்ளது. கலைஞர் பெற்றுள்ள வெற்றியைப் பாராட்டித் – தமிழீழ மக்களின் சார்பில் – **விடுதலைப் புலிகள் இயக்கம்** அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தி, அந்த மகிழ்ச்சியினதும் – நம்பிக்கையினதும் பிரதிபலிப்பேயாகும்.

திராவிட முன்னேற்றக் கழகம் பெற்றுள்ள இந்த வெற்றி. சிங்களப் பேரினவாத சக்திகளுக்குக் கலக்கத்தை உண்டு பண்ணியுள்ளது. கலைஞரின் தலைமையில் அமைந்துள்ள தமிழ்நாட்டின் அரசு, ஈழத்தமிழரின் விடுதலைப்போராட்டத்திற்கு ஆதரவான சக்தியாக அமைந்து விடும் என்ற அச்சம், சிங்களதேசத்தில் எழுந்துள்ளது.

தமிழர் ஆட்சியைப் பிரதான இலட்சியமாகக் கொண்டு, அறிஞர் அண்ணாத்துரையால் உருவாக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகம், அன்றிலிருந்து இன்றுவரை, ஈழத்தமிழர்பால் அனுதாபத்தையும், அவர்களது விடுதலைப் போராட்டத்தின்பால் ஆதரவையும் கொண்டு விளங்குகின்றது.

முதன் முதலாக தி. மு. கழகம் தமிழ்நாட்டின் ஆட்சிப்பொறுப்பைக் கையேற்ற காலப்பகுதியிலேயே, இலங்கைத் தீவில் முதலாவது தமிழினப் படுகொலை நடந்திருந்தது. அதற்காகப் பண்டார நாயக்கா அரசைக் கண்டித்தும், ஈழத் தமிழர்களுக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறியும் அறிஞர் அண்ணா, அன்று வெளியிட்ட கருத்துக்கள் தமிழீழ மக்களுக்கு நம்பிக்கையைக் கொடுத்திருந்தன. " தானாடாவிட்டாலும் தசை ஆடும் " என்று, ஈழத்தமிழரின் அவல நிலையை எண்ணி, சகோதர உணர்வுடன் – அறிஞர் அண்ணா அன்று கூறிய வார்த்தைகளை எமது மக்கள் என்றும் மறக்க மாட்டார்கள்.

அறிஞர் அண்ணாவின் வழியிலேயே – அவருக்குப் பின்னர் தி. மு. க, வை வழிநடாத்தும் – கலைஞர் கருணாநிதி அவர்களும் ஈழத்தமிழர்களுக்குச் சார்பான அரசியல் நிலைப்பாட்டையே கடைப்பிடித்து வருகின்றார்.

அமைதி காக்கும் படை என்ற பெயரில் – ஈழத்திற்கு வந்து தமிழ் மக்களைப் படுகொலை செய்துவிட்டு – இந்தியச் சிப்பாய்கள் – தம் தாய்நாடு திரும்பிய போது தமிழ்நாட்டின் முதல்வராகக் கலைஞர் அவர்களே இருந்தார். இந்தியச் சிப்பாய்களின் ஒரு அணி சென்னைத் துறை முகத்தில் வந்து இறங்கியபோது – ஈழத் தமிழர்கள் மீது கொடுமைகள் இழைத்ததற்கு ஆட்சேபம் தெரிவிக்கும் முகமாக – இந்தியப் படையணியின் வரவேற்பு விழாவில் பங்கேற்காது, அதை பகிஸ்கரித்து தனது தமிழின உணர்வை, ஈழத்தமிருக்கு ஆதரவான நிலைப்பாட்டைக் கலைஞர் வெளிப்படுத்தி இருந்ததைத் தமிழீழ மக்கள் என்றும் நினைவில் வைத்திருப்பர்.

கலைஞரின் ஆட்சியைக்கலைத்துவிடச் சதிசெய்த – முன்னாள் இந்தியப்பிரதமர் சந்திரசேகரின் அரசு, கலைஞர் மீது சுமத்திய குற்றச்சாட்டு யாதெனில் — தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்குச் சார்பான கொள்கையை – புலிகள் இயக்கத்திற்கு ஆதரவான நிலைப்பாட்டைக் கலைஞர் கடைப்பிடித்தார் என்பதேயாகும். அந்த அளவுக்குக் கலைஞர் கருணாநிதி அவர்கள் ஈழத் தமிழினத்திற்குச் சார்பாக நின்று எமது மக்களின் அரசியற்போராட்டத்தை ஆதரித்து வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆயினும், ஈழத் தமிழரின் விடுதலைப் போராட்டத்தை ஆதரித்துவரும் கலைஞர் அவர்கள், போராட்டத்திற்குத் தலைமை தாங்கி வழிநடாத்தும் புலிகள் இயக்கம் தொடர்பாகச் சில பாதகக் கருத்துக்களைத் தெரிவிப்பது, எமது மக்களிற்குக் கவலையை உண்டுபண்ணியுள்ளது. புலிகள் இயக்கம் தொடர்பாகக் கலைஞர் வெளியிடும் பாதகக்கருத்துக்களைத், தமிழினக் கொலையில் ஈடுபடும் சிங்கள அரசு தனக்கு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டு மேலும் தமிழ் மக்களைக் கொடுமைப்படுத்தும் என்பதைக் கலைஞர் அவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். ஈழத் தமிழரின் அரசியற் தலைமையாகப் புலிகள் இயக்கம் இல்லாது போகுமானால், ஈழத்தமிழரின் தனித்துவம் சிதைக்கப்பட்டு, தமிழர் தாயகம் சிங்களமயமாக்கப்படும் என்பதைப் புலிகள் இயக்கத்தின் எதிரிகள் கூட, ஒப்புக்கொள்கிறர்கள்.

எனவே புலிகள் இயக்கம் தொடர்பாகக் கலைஞர் அவர்கள் இப்போது கடைப்பிடிக்க விரும்பும் எதிர் நிலைப்பாட்டை, அவர் கைவிடவேண்டும் என்று, தமிழீழ மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

அதேவேளை, தமிழ் மக்களை இனக் கொலை செய்துவரும் சிங்கள அரசுக்கு அனைத்து வழிகளிலும் இராணுவ உதவிகளை வழங்கிவரும் இந்திய மத்திய அரசின் செயலைத் தடுத்து நிறுத்தக், கலைஞர் அவர்கள் முயலவேண்டும் என்பதும் எமது மக்களின் விருப்பமாகும்.

அத்துடன், இனப்படுகொலையில் இருந்து தற்பாதுகாப்புத்தேடி ஒரு பாதுகாப்பான, நிம்மதி நிறைந்த வாழ்க்கையை வாழ்வதற்காக ஈழத்தமிழர் நடாத்தும் தன்னாட்சி உரிமைப் போராட்டத்திற்குக் கலைஞரின் அரசு நிபந்தனையற்ற ஆதரவைத் தந்து, எமது போராட்டத்திற்கு உதவி புரிய வேண்டும் என்றும் தமிழீழ மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

வரலாற்றில் என்றும் இல்லாத அளவுக்கு இன்று ஈழத்தமிழினம் இனப்படுகொலை அபாயம் ஒன்றைச் சந்தித்துள்ளது. இந்த இக்கட்டான நிலையிற் கலைஞர் கருணாநிதி அவர்கள் தமிழ்மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தைத் தலைமை ஏற்று நடாத்தும் புலிகள் இயக்கத்திற்குச் சார்பாகவும் தனது கொள்கையை வகுத்துக் கொள்ள வேண்டும் எனத் தமிழீழமக்கள் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கின்றனர். O

# விடுதலைப் புலிகள் இயக்கம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவின் முன்னைய ஆட்சியாளர்களது வெளிநாட்டுக் கொள்கை வகுப்பாளர்கள் - ஈழத் தமிழரின் தேசியப் பிரச்சினை தொடர்பாக - மிகைப்படுத்தப்பட்ட அச்சங்களின் அடிப்படையிற் தவறான கொள்கைகளையே வகுத்துவைத்திருந்தனர்.

அதன் பிரகாரம், தமிழரின் விடுதலைப் போரும், - தன்னாட்சி ஒன்றை நிறுவமுயலும், அவர்களது அரசியல் உரிமைப் போராட்டமும் இந்தியத் தேசிய நலனுக்கு விரோதமான செயற்பாடுகள் என, இந்திய வெளிவிவகாரக் கொள்கை அர்த்தம் கற்பித்தது.

அதன் காரணமாக - ஈழத் தமிழினத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் முன்னைய இந்திய அரசு ஈடுபட்டுவந்தது.

தமிழினக் கொலையில் ஈடுபட்டுவரும் சிங்கள அரசுக்கு அனைத்து வகை உதவிகளையும் வழங்கியதுடன்-

தமிழரின் போராட்டச்சக்தியான புலிகள் இயக்கத்திற்கு எதிராக இந்தியாவிலும், சர்வதேசத்திலும் இராணுவ - அரசியல் நடவடிக்கைகளை எடுத்து, தமிழரின் விடுதலைப் போரட்டத்திற்குப் பெரும் பாதிப்பையும் முன்னைய இந்திய ஆட்சியாளர்கள் ஏற்படுத்தியிருந்தனர்.

இலங்கைத்தீவில் ஈழத்தமிழரின் அரசியற் பலம் சிதைக்கப்படுமானால், அது இந்திய நாட்டின் தேசிய நலனுக்கு நிச்சயமாகவே குந்தகமாக அமையும்.

ஏனெனில் - உபகண்டத்துடன் ஒரு வரலாற்றுப் பகைமையையும், இலாபநோக்குடைய ஒரு அரசியல் உறவையுமே கொண்ட ஒரு தேசமாகத்தான் சிறிலங்கா உள்ளது.

தென்னாசியப் பிராந்தியத்தில், இந்தியாவின் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல்ஒன்று ஏற்படுமானால்இந்தியாவை அச்சுறுத்துபவரின்பக்கத்திலேயேசிறிலங்கா அரசு நிற்கும் என்பதே வரலாற்று உண்மையாகும். இந்திய - பாகிஸ்தான் போர்களின்போதும், சீன- இந்திய யுத்தத்தின்போதும் இந்தியாவிற்கு எதிரான நிலைப்பாட்டையே அன்றைய சிறிலங்கா அரசாங்கங்கள் எடுத்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், இந்திய நாட்டின் உண்மையான பகைவனான சிறீலங்கா அரசுக்கு ஆதரவாகவும், இந்தியாவின் உண்மையான நட்புச்சக்தியான ஈழத்தமிழினத்திற்குப் பாதகமாகவும் இருக்கும் தற்போதய இந்திய வெளிவிவகாரக் கொள்கையில், புதிய ஒரு பாரிய மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும் என, தமிழீழ மக்கள் விரும்புகின்றனர்.

அதாவது, ஈழத்தமிழினத்தின் போராட்டச்சக்தியான புலிகள் இயக்கம் தொடர்பாக, முன்னைய அரசு கடைப்பிடித்த கொள்கைகளைக் கைவிட்டு, புலிகளுக்கு எதிராகச் செயற்படுத்தப்பட்ட எல்லாவிதமான நடவடிக்கைகளையும் நிறுத்திவிடுவதுடன் -


தமிழீழ மக்களின் உரிமைப் போராட்டத்தில் ஒரு நேச சக்தியாகத் திகழ்ந்து - புதிய அரசு ஆதரவளிக்கவேண்டுமென்றே தமிழீழமக்கள் எதிர்பார்க்கின்றனர்.

அதேசமயம், தமிழீழ மக்களின் தன்னாட்சி உரிமைப் போராட்டம் இந்தியாவின் தேசிய நலன்களுக்குக் குந்தகம் விளைவிக்கும் என்ற முன்னைய இந்திய அரசின் கொள்கை ஆதாரமற்றது, அவ்விதமான அச்சம் தேவையற்றது - என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகின்ற புலிகள் இயக்கம் -

தமிழீழ மக்கள், எப்போதும், பாரதநாட்டின் நட்புறவுச் சக்தியாகவே திகழ்ந்து வந்துள்ளார்கள் என்பதை நினைவு படுத்துவதோடு, இனியும் அவ்வாறாகவே திகழ்வார்கள் என்பதை வலியுறுத்தவும் விரும்புகின்றது. O

# 'ரிவிரேச - 2'உம் புலிகளும்

"ஆரியப்பிரகாசம் - 1'' இராணுவ நடவடிக்கைமூலம் வலிகாமம் ஆக்கிரமிக்கப்பட்ட பின்னர், தென்மராட்சி - வடமராட்சி மீதான படையெடுப்பை அரசபடைகள் எந்தநேரமும் நடாத்தலாம் என்ற நிலை இருந்தது. அத்தகையதொருபடையெடுப்பு புதுவருடத்திற்கு முன்னர் நடைபெறும் என்று ரதவத்தவும சூசகமாகத் தெரிவித்திருந்தார். அந்தப் படைஎடுப்பு நடைபெறமுன்னர் - முடிந்தளவுக்கு - மக்களை வன்னிக்கு நகர்ந்து, நெருக்கடியை தணிக்க உதவுமாறு மக்களிடம் புலிகள் வேண்டியிருந்தனர்.



வலிகாமம் ஆக்கிரமிக்கப்பட்ட பின்னர், தமிழர்படையின் ஆட்பலத்தில் பாரிய அதிகரிப்பை மேற்கொள்ளவேண்டிய அவசர தேவைபற்றி, புலிகள் தீவிர பரப்புரை செய்தனர். ஆயிரக்கணக்கான போராளிகளை இந்த ஆட்திரட்டற் பணியில் ஈடுபடுத்தும் அளவுக்கு - அந்த வேலையை - புலிகள் இயக்கம் அத்தியாவசியமானதாகக் கருதியது. ஆயினும், இந்த ஆட்திரட்டலில், தமிழர்படையால் எதிர்பார்த்த இலக்கை எட்டமுடியவில்லை.

மரபுவழிப் போர்முறைக்கு வேண்டிய அடிப்படைத்தேவைகள்பற்றி - புலிகள் இயக்கம்- தொடர்ச்சியாக மக்களுக்குத் தெளிவுபடுத்தி வந்துள்ளது. அதில், ஆட்பலத்தின் முக்கியத்துவம் பற்றி மக்களுக்கு விளக்கப்பட்டது. பரந்த ஒரு பிரதேசத்தைக் காவல்காக்கவும், தேவை ஏற்படும்போது அந்த இடத்தில் சண்டையிடவும் போராளிகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது. வலிகாமச் சமரில் தமிழர்படை சந்தித்த இராணுவப் பின்னடைவுக்கு பிரதானகாரணம் புலிகள்இயக்கத்திற்கு இருந்தஆட்பற்றாக்குறையும் - எதிரிப்படையிடம் இருந்த ஆதீத ஆட்பலமுமாகும். எதிரி அங்கே பயன்படுத்திய அபரிமிதமான ஆயுதபலமும் அவன் பெற்ற வெற்றிக்குக் காரணம் என்பதும் மறுக்கமுடியாதது.

தமிழர்படைக்குத் தேவையான ஆட்தொகை இதுவரை வந்து சேராத நிலையிலேயே தென்மராட்சிமீதான படையெடுப்பை எதிரி ஆரம்பித்தான். வலிகாமத்தில் இருந்தும், ஆனையிறவு- வெற்றிலைக்கேணித் தளத்தில் இருந்துமான இரு சமர்க்களங்களை இராணுவத்தினர் திறக்கலாம் என்ற ஒரு கணிப்பு முன்னர் இருந்தது. இதனால், எதிர்பார்க்கப்பட்ட இரண்டு சமர்க்களங்களிலும் எதிர்த்தாக்குதலுக்கான முன்னேற்பாடுகளை புலிகள் செய்தபடி இருந்தனர். ஆயினும், தமிழர்படைக்கு இருந்த பலவீனத்தை (ஆட்பற்றாக்குறை) எதிரி தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தினான். போராளிகள் குறைந்தளவில் நிலைகொண்டிருந்த மட்டுவிற் பகுதியூடாக எதிரி திடீரென முன்னேறி ஊர்மனைக்குள் புகுந்தான்.

மட்டுவிற் பகுதியூடாக இராணுவம் நகர்ந்துவருகின்றது என்பதை அறிந்த மக்கள் கிளாலி இறங்குதுறையை நோக்கி வெள்ளமெனத் திரண்டு நகர்ந்தனர். ஆனால், இலட்சக்கணக்காகத் திரண்ட அந்த மக்கள் சமுத்திரத்தை ஓரிரு நாட்களில் வன்னிப்பெருநிலப்பரப்பிற்கு அனுப்புவது என்பது நடைமுறைச்சாத்தியமற்ற ஒன்று. இதுமக்களுக்கும் நன்கு தெரியும். இதேவேளை வன்னிக்கு மக்கள் செல்வதைத் தடுக்கும் நோக்குடன், கிளாலி இறங்குதுறைப் பகுதிமீது படையினர் பீரங்கித் தாக்குதல்களையும் நடாத்தினர். அத்துடன், சிங்கள விமானப்படையின் 'எம ஐ. 24' தாக்குதல் உலங்கு வானூர்திகளும் கடற்பாதை எங்கும் குண்டுகளை வீசி படகுப்பயணத்திற்குத் தடைகளை ஏற்படுத்தி மக்களைப் பயமுறுத்தின. இந்த இக்கட்டான நிலையில் மக்கள் மீண்டும் இராணுவம் கைப்பற்றிய பகுதிகளை நோக்கித் திரும்பிச் செல்வதை தவிர அவர்களுக்கு எந்த ஒரு மாற்று வழியும் இருக்கவில்லை. அத்துடன், வெளளமென மக்கள் குவிந்திருந்த கிளாலி இறங்கு துறைப்பகுதிமீது நடந்த கண்மூடித்தனமான குண்டுத் தாக்குதல்களால் மக்கள் சந்திக்க இருந்த பேரழிவுகளைத் தடுக்கும் நோக்குடன் அங்கே குழுமி நின்ற மக்களை திரும்பிச் செல்லும்படி புலிகளும் கோரினர்.

எனவே, இன்று எதிரி பிரகடனப்படுத்துவதுபோல, இராணுவத்திடம் மக்கள் விரும்பிச்செல்லவில்லை. அதற்கு மாறாக அவர்கள், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வாழ்வதற்கு- விரும்பியே கிளாலிக்கு வர - முயற்சி செய்தனர். எனினும் குடாநாட்டின் புவியியல் அமைப்பு இந்த மக்களின் விருப்பத்திற்கு குறுக்கே நின்றுவிட்டது. இது காரணமாக இராணுவத்தின் ஆக்கிரமிப்புப் பகுதிக்குள் செல்லவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு மக்கள் உள்ளானார்கள் என்பதே உண்மையாகும். வன்னிப் பெருநிலத்திற்கான பிரயாணத்திற்கு ஒற்றையடிப்பாதை ஒன்றேனும் மக்களுக்கு இருந்திருக்குமானால் இராணுவத்தின் பிடியிலிருந்து தப்பி மாபெரும் இரண்டாவது இடப்பெயர்வு ஒன்றை - மக்கள் வன்னி நோக்கி நடாத்தியிருப்பர். எனினும், கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி - ஆபத்தை எதிர்கொண்டு - சுமார் ஒன்றரை இலட்சம் மக்கள் - ஏப். 19 இலிருந்து ஏப். 26 - வரையான நாட்களில் - வன்னி வந்து சேர்ந்தனர்.

குடாநாட்டின் மையமும், கேந்திரமுக்கியத்துவம் வாய்ந்ததுமான வலிகாமம் பகுதி, சிங்களப் படைகளால் ஆக்கிரமிக்கப்பட்ட பின்னர் போராட்டத்தின் கேந்திரமையமாக வன்னிப் பெருநிலப்பரப்புத் திகழத் தொடங்கியது. இதேவேளை, வலிகாமம் அற்ற நிலையில் இருந்த வடமராட்சியும் - தென்மராட்சியும் மரபுவழிப் போருக்கான சாதகத் தன்மைகளைத் தமிழர் படைக்கு வழங்கமுடியாதிருந்தன. இதற்குப் பிரதான காரணம் போராட்டத்தின் (தற்போதைய) மையத்திலிருந்து நடைபெறவேண்டிய படைநகர்த்தலுக்கும், விநியோக வேலைகளுக்கும், மருத்துவ சேவைகளுக்கும் தேவையான மார்க்கங்களில் தமிழர்படைக்கு இருக்கின்ற பாதகத்தன்மைகளே ஆகும். வன்னிப் பெரு நிலப்பரப்புடனான தரைப்பாதை எதிரியின் முழுமையான ஆக்கிரமிப்பிற்குள் உள்ளது. அத்துடன் ஒரு மரபுவழிச்சமருக்கு வேண்டிய அனைத்துவகை வழங்கல் வேலைகளையும் கடல்வழிமூலம் செய்யவேண்டுமானால் இப்போது உள்ளதைவிட - கடலில் - தமிழர்படை மேலும் பலமும் - வளமும் பெறவேண்டியுள்ளது.

*"போரில் பின்வாங்கல் இல்லாத முன்னேற்றம் பற்றி எவருக்கும் மாயை வேண்டாம்; எங்கள் இடப்பரப்பின் அல்லது எங்கள் பின்னணித் தளப் பிரதேசத்தின் நெகிழ்வு பற்றி எவரும் அதிர்ச்சியுற வேண்டாம். சண்டை செய்வதை மட்டும் வற்புறுத்தி, விலகிச் செல்வதை வற்புறுத்தாத எந்தவொரு இராணுவ மேதையும் உலகில் இல்லை. எங்களின் மூலோபாயங்களும், தந்திரோபாயங்களும் சண்டை செய்வதற்காக உருவாக்கப்பட்டவையே."*

– மாஓ சே துங்


"எதிரி விரும்புவதை நீ செய்யாதே" என்பது ஒரு போர்க்களத்துப் பொன்மொழி. இரண்டு தண்டவாளங்களுக்கு இடையே உள்ள பகுதி போல, இருபுறமும் இராணுவ வலயங்களால் அரண்செய்யப்பட்டுக் கிடக்கும் தென்மராட்சி - வடமராட்சிப் பகுதிகளில் ஒரு தீவிரமரபுவழிச் சமருக்குப் புலிகளை இழுக்க வேண்டும் என்று சிங்களத் தளபதிகள் விரும்பினர். நெருக்கடி ஏற்படும்போது பாதுகாப்பை நாடி நகர்ந்து செல்வதற்கு வாய்ப்பில்லாது இருந்த அந்தப் பகுதியில் ஒரு மரபுவழிச் சமரில் புலிகளை ஈடுபடச் செய்து பெருமளவு புலிகளையும், பெருந்தொகை மக்களையும் அழித்து, போராட்டத்தை ஒடுக்குவதற்கான ஒரு வாய்ப்பை எதிரி எதிர்பார்த்திருந்தான். எதிரி விரும்பிய அந்த நல்வாய்ப்பு எதிரிக்கு கிட்டவில்லை.

ஆயினும், கிளாலி இறங்குதுறை உட்பட தென்மராட்சி - வடமராட்சியின் பல பகுதிகள் படையினரின் ஆக்கிரமிப்பிற்குள் அகப்பட்டதும், வன்னிப் பெருநிலப்பரப்புடன் குடாநாட்டிற்கு இருந்த பயணிகள் போக்குவரத்துத் துண்டிக்கப்பட்டதும் போராட்டம் சந்தித்த மேலும் ஒரு பின்னடைவு ஆகும். அடுத்தடுத்து தமிழர் போராட்டம் சந்திக்கும் இத்தகைய இராணுவப் பின்னடைவுகள் தமிழ் மக்களிடம் கவலையை உண்டுபண்ணியுள்ளன என்பது உண்மை. ஆயினும், இவை குறித்து எமது மக்கள் அச்சமடையத் தேவையில்லை. படைபலத்தை மேலும் வளர்த்துக்கொண்டு - புதிய போர் உபாயங்களைப் பயன்படுத்தி- எதிரி ஆக்கிரமித்த மண்ணை மீட்டெடுக்க முடியும். கடந்த காலங்களிலும் தமிழீழ விடுதலைப் போராட்டம் பல பின்னடைவுகளைச் சந்தித்திருந்தது மக்களுக்குத் தெரியும். 'ஒப்பறேசன் லிபறேசன்' என்ற இராணுவ நடவடிக்கைமூலம் வடமராட்சி படையினரால் கைப்பற்றப்பட்டபோதும், ஜெனரல் கொப்பேக்கடுவவின் தலைமையில் குடாநாடு முற்றுகைக்கு உட்படுத்தப்பட்டபோதும் போராட்டம் நெருக்கடிகளைச் சந்தித்தது. ஆயினும், தலைவர் பிரபாகரன் மேற்கொண்ட பல்வேறு இராணுவ தந்திரோபாயங்களால் அந்த நெருக்கடிகள் தீர்ந்ததுடன் போராட்டமும் வளர்ந்ததை இங்கு சுட்டிக்காட்ட முடியும். இந்திய ஆக்கிரமிப்பிற்கு எதிரான போரைப் 'போராட்டத்தின் புதைகுழி' என்றே பலர் நினைத்திருந்தனர். ஆனால், போராட்டப் பயிருக்கு இடப்பட்ட உரமாக, தலைவர் பிரபாகரன் அதை மாற்றி அமைத்திருந்தார் என்பது அகில உலகுமே ஏற்றுக்கொண்ட உண்மை. போராட்டம் சந்தித்த ஒவ்வொரு பின்னடைவுகளை அடுத்தும், போராட்டம் ஒரு பாய்ச்சல் வளர்சியை அடைந்துவருவதை தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாறு காட்டுகின்றது. தற்போதைய பின்னடைவுகளுக்குப் பின்னால் ஒரு பாரிய வளர்ச்சியைப் போராட்டம் அடையும் என்பதை நாளைய சம்பவங்கள் சுட்டிக்காட்டும்.

கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும் நகரங்களை, கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலங்களை விடுதலை இயக்கங்கள் இழப்பதும், பின்னர் அவற்றை மீட்பதும் 'உலக விடுதலை இயக்கங்கள்' அனைத்தும் சந்தித்துள்ள ஒரு அனுபவமாகும்.

நிலங்களை இழப்பது என்பது மரபுவழிப் படைகளைப் பொறுத்தவரை பாரிய விடயமாக இருக்கும். ஆனால், மக்கள் ஆதரவும், இலட்சியதாகமும், உறுதியான தலைமையும் கொண்ட ஒரு விடுதலைச் சேனையைப் பொறுத்தவரையில் அது ஒரு தற்காலிகப் பின்னடைவாகவே விளங்கும். அத்துடன் நிலங்களை மீட்பதும் - பின் இழப்பதும் - இறுதியில் அவற்றை நிரந்தரமாக மீட்பதும் ஒரு விடுதலைப் போராட்டத்தின் இயல்பாகும். இந்த வரலாற்று இயல்பை சீன விடுதலைப் போராட்டத்திலும் காணமுடியும்; வியட்னாம் விடுதலைப் போராட்டத்திலும் பார்க்கமுடியும்; எரித்திரிய விடுதலைப் போராட்டத்திலிருந்தும் அறியமுடியும்.

சீனப் புரட்சிக்காலத்தில் யேனான் என்ற பகுதியை மாஓவின் 'செஞ்சேனை' 10 வருடங்களாக கட்டுபபாட்டிற்குள் வைத்திருந்தது. ஆனால், 1943 ஆம் ஆண்டு புரட்சியின் எதிரிகள் இரண்டு இலட்சதது முப்பதாயிரம் ஆட்களைக் கொண்ட பெரும் படையுடன் யேனானைக் கைப்பற்ற வந்தபோது, மா ஓ சே துங் அவர்கள், அதிர்ச்சிதரும் முடிவு ஒன்றை எடுத்தார். 'யேனானிலிருந்து பின்வாங்குவது' என்பதே அந்த முடிவாகும். 10 வருடங்களாகப் பாதுகாத்த மண்ணை இழப்பதைவிட அதைப் →



வகைவகையாய் வாழ்ந்த எங்கள் ஊரிழந்து வந்தோம் - இன்று புகையிரதப் பெட்டியினில் குடியிருந்து கொண்டோம். படையெடுத்த சிங்களத்தின் களவுகளை வென்றோம் - நாளை பகைவிரட்டி மீண்டுமெங்கள் ஊருக்குச் செல்வோம்.

பாதுகாக்கப் போராடிச் சாவது மேல் என, 'செஞ்சேனை'யின் தளபதிகள் சிலர் வாதிட்டனர். ஆயினும், மா ஓ அந்த வார்த்தைகளை ஏற்கவில்லை. எதிரிகளின் படையுடன் ஒப்பிடும்போது பத்தில் ஒருபங்கு ஆட்தொகையையே கொண்ட மாஓவின் படைகள், தீவிர சண்டையில் அங்கே ஈடுபட்டிருக்குமானால், ( யேனானையும் ) நிலத்தையும் இழந்து, போராளிகளையும் இழந்து மீளமுடியாத ஒரு தோல்வியை சீனத்துப்புரட்சி சந்தித்திருக்கும். ஆனால், அவர்கள் பின்வாங்கி - தங்களது ஆட்தொகையை அதிகரித்து - ஆயுத பலத்தைப் பெருக்கி மீண்டும் யேனான்மீது படை நடாத்தி அப்பகுதியை நிரந்தரமாக மீட்டனர். இந்த வரலாற்று வெற்றி தொடர்பாக மாஓ சே துங் கூறிய புகழ்மிக்க பொன்மொழி ஒன்று உண்டு.

ஆட்பலத்தை தக்கவைத்து
நிலப்பரப்பை இழப்பதால்
ஆட்பலத்தையும் நிலப்பரப்பையும்
தக்கவைக்கலாம்.
ஆட்பலத்தை இழந்து
நிலப்பரப்பைத் தக்கவைத்தால்
ஆட்பலத்தையும், நிலப்பரப்பையும்
இரண்டையுமே இழக்க நேரிடும்.''

என்பதே அந்தப் போர்ப் பொன்மொழி ஆகும்.

(இந்த இதழிலுள்ள ''போரும் தந்திரோபாயங்களும்'' எனும் கட்டுரை அந்த யேனான்சமரை விபரிக்கிறது)

இதேபோல, 1974 ஆம் ஆண்டு, எரித்திரிய விடுதலை இயக்கம் தனது கட்டுப்பாட்டிற்குள் இருந்த 'அஸ்மாறா' என்ற அதன் கேந்திர முக்கியத்துவம் மிக்க தலைநகரை எதிரிப்படையிடம் இழந்தது. ஆயினும், எரித்திரிய மக்கள் சளைக்காது தொடர்ந்து போராடி சில வருடங்களில் மீண்டும் 'அஸ்மாறா' நகரை மீட்டெடுத்து எதிரிப்படைக்குப் பெருந்தோல்வி ஒன்றைக் கொடுத்தனர். இவ்விதம், கட்டுப்பாட்டு நிலங்களை இழப்பது என்பதும், இறுதியில் அவற்றை மீட்பது என்பதும் உலக விடுதலைப் போராட்டங்களின் பொதுப்போக்காகும்.,

இது ஒருபுறமிருக்க, வியட்னாம் விடுதலைப் போராட்டத்தை நசுக்க அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சு வரைந்த ஒரு போர்முறைத் திட்டம் பற்றி இங்கு பார்ப்போம்.

Fix Theory என்ற ஒரு போர்த்தந்திரத்தை நடைமுறைப்படுத்த அமெரிக்கத் தளபதிகள் முயன்றனர். அதாவது வியட்னாம் போராளிகளது கட்டுப்பாட்டிலுள்ள பிரதான பகுதிகளைத் தேர்ந்தெடுத்து, அவற்றின்மீது பாரியதொரு, படையெடுப்பை நடாத்துவது என்பதே திட்டமாகும். அத்தகைய பிரதான தளங்களை அமெரிக்கப் படையினரிடமிருந்து பாதுகாப்பதற்காக, வியட்னாம் தலைமை தனது ஆட்பலத்தை ஒருங்குதிரட்டிக் குவித்து, பாரிய எதிர்த்தாக்குதலை நடாத்த முயலும் என்று அமெரிக்கத் தளபதிகள் கணித்தனர். அந்த நிலையில், தங்களிடம் ( அமெரிக்கர் ) உள்ள அபரிமிதமான படைக்கல சக்தியை ( Fire power ) அவர்கள் ( வியட்னாம் ) மீது பயன்படுத்தி, போராளிகளை அழித்து, விடுதலைப் போரின் பலத்தைச் சிதைக்கமுடியும் என்று அமெரிக்க இராணுவ வல்லுநர்கள் எதிர்பார்த்தனர். இத்திட்டத்திற்கு அமைய வியட்னாமின் புகழ்பூத்த தளபதி ஜெனரல் ஜியாப் இன் தலைமைப் பணிமனை அமைந்திருந்த ஒரு இராணுவக் கேந்திரப் பகுதிமீது, ( 1976 ) பாரிய படையெடுப்பொன்றை அமெரிக்கா நடாத்தியது. அந்தப் படையெடுப்பை வியட்னாம் போராளிகள் நிச்சயம் எதிர்கொள்வர் என்ற அமெரிக்கத் தளபதிகளின் நம்பிக்கையைப் பொய்யாக்கிவிட்டு, ஜெனரல் ஜியாப் சண்டையிடாது பின்வாங்கினார். உள்ளே நுழைந்த அமெரிக்கப் படையினர் மீது பின்னர் சிறு சிறு தாக்குதல்களை நடாத்தி, அவர்களை சிறுகச் சிறுகக் கொன்று, இராணுவ - அரசியல் ரீதியில் தொல்லை கொடுத்து, இறுதியில் அந்தப் பகுதியைவிட்டே வியட்னாம் போராளிகள் வெளியேற்றினர்.

**கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும் நகரங்களை, கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலங்களை விடுதலை இயக்கங்கள் இழப்பதும், பின்னர் அவற்றை மீட்பதும் 'உலக விடுதலை இயக்கங்கள்' அனைத்தும் சந்தித்துள்ள ஒரு அனுபவமாகும்.**

இவ்விதம், படையெடுப்பை எதிர்கொண்டு தாக்குவதா, அல்லது பின்வாங்கி வேறு யுத்த தந்திரோபாயங்களைக் கைக்கொண்டு போரைத் தொடர்வதா? என்ற விடயத்தை அந்த அந்தப் போராட்டங்களின் தலைமையே தீர்மானிக்கும். விடுதலைக்காகப் போராடும் மக்களினதும் - விடுதலைப் போராட்டத்தினதும் நன்மையைக் கருத்திற்கொண்டு, அவ்வாறான முடிவுகளைப் போராட்டத்தலைமைகள் எடுப்பது உலக வழமை.

குடாநாட்டை ஆக்கிரமிப்பது என்பது 'சூரியப் பிரகாசம்- 1' சூரியப்பிரகாசம்- 2' என்பவற்றைஉள்ளடக்கிய ஒரு வருட வரலாற்றைக் கொண்டது அல்ல. இரண்டாவது ஈழப்போர் தொடங்கிய நாளில் இருந்து இராணுவ, பொருளாதார, அரசியல் ரீதிகளில் ஐ. தே. கட்சி மற்றும் பொ. ஜ.ஐ. முன்னணி ஆகிய ஆட்சியாளர்களால் இடைவிடாது மேற்கொள்ளப்பட்ட ஒரு தீவிர முயற்சியே இன்றைய குடாநாட்டு ஆக்கிரமிப்பாகும். ஐ தே. கட்சியின் ஆட்சியில் ஜெனரல் கொப்பேகடுவவின் தலைமையில் குடாநாட்டு ஆக்கிரமிப்பு ஆரம்பித்து வைக்கப்பட்டது. குடாநாட்டின் மீது தீவிர பொருளாதாரத்தடையை விதித்து, குடாநாட்டைச் சூழ ஒரு இறுக்கமான இராணுவ முற்றுகையை இட்டு. அதன் பின் குடாநாட்டைப் பூரணமாக ஆக்கிரமிப்பது என்பது தான் ஐ. தே. கட்சியின் போர்த்திட்டம்.

இத்திட்டத்தின் தொடர்ச்சியாக குடாநாட்டிற்குள் ஊடுருவி அந்த நிலப்பரப்பு முழுவதையும் தனது இராணுவப் பிடிக்குள் கொண்டுவருவது என்பது சந்திரிகா, ரத்வத்த அரசின் போர்த்திட்டமாகும். சிங்கள தேசத்தின் படைபலத்தை ஒருங்கு திரட்டி, அதைக் குடாநாட்டிற்குள் குவித்து, தனது போர்த் திட்டத்தை நிறைவேற்ற அரசு முடிவுசெய்தது. இந்த முயற்சியின் போது தமிழ் மக்கள் சந்திக்க இருந்த இழப்புகள் - அழிவுகள் - என்பனபற்றி சந்திரிகா அரசு கருத்தில் எடுக்கவில்லை. இந்த மனித அவலங்களைத் தமிழினம் ஒரு பாடமாக எடுக்கவேண்டும் என்பது பேரினவாதிகளின் எதிர்பார்ப்பு. தமிழினம் இனத்தனித்துவத்தை நிலைநாட்ட முயன்றால், இத்தகைய துன்பங்களை அவர்கள் அனுபவிக்கவேண்டும் என்றதொரு இன அழிப்புச் செய்தியை இந்த ஆக்கிரமிப்பின் மூலம் சந்திரிகா அரசு காட்ட முயன்றுள்ளது. பலத்தைப் பிரயோகித்து - அழிவுகளை உண்டு பண்ணி - மக்களைப் பயமுறுத்தி தேசங்களை அடிமை கொள்வது என்பது ஒரு ஆக்கிரமிப்புச் சித்தாந்தம். இவற்றைக் கண்டு அஞ்சிப் - பயந்து - பின்வாங்கிய தேசங்களில் இந்த மேலாதிக்க சித்தாந்தம் வெற்றி கண்டுள்ளது. ஆனால், இறுதிவரை எதிர்க்கத் துணிந்த தலைமைகளைக் கொண்ட தேசங்களிடம் இந்தப் போர்த் தந்திரம் தோல்வியையே கண்ட வரலாறும் - பூமியில் நிறைய உண்டு.

இரண்டாம் உலக மகாயுத்த காலத்தில், பிரித்தானியப்படைகள் ஜேர்மனியச் சேனைகளிடமிருந்து இமாலய நெருக்கடிகளைச் சந்தித்தன. ஜெனரல் றொமெல் என்ற புகழ்பெற்ற தளபதியின் தலைமையிலான ஜேர்மனியப் படைகள் - ஆபிரிக்கக் கண்டத்தில் - பிரித்தானியப் படைகளை மண்கவ்வச்செய்து, தரைப்போரில் மேலாதிக்கம் செலுத்தின. அத்திலாந்திக் சமுத்திரத்திலும், பசுபிக் பெருங்கடலிலும் உலாவந்த பிரித்தானியக் கப்பல்களை ஜேர்மனிய நீர்மூழ்கிகள் கடலடிக்கு அனுப்பி, கடற் போரில் பிரித்தானிய தேசத்திற்குப் பாரியதொரு பின்னடைவைக் கொடுத்தன. ஆங்கிலக் கால்வாயைக் கடந்து பறந்த ஜேர்மனியப் போர் விமானங்கள் லண்டன் மாநகரில் அழிவுகளை விதைத்தன. 800 இற்கும் மேற்பட்ட ஜேர்மனியப் போர் விமானங்கள், லண்டன் மீது, ஒரு இரவில் நடாத்திய வான்தாக்குதலால் 1200 பொதுமக்கள் கொல்லப்பட்ட துயரமும் நடந்தது. பிரித்தானியரின் வான்பரப்பை ஜேர்மனிய விமானங்கள் கைப்பற்றத் தொடங்கிய ஒரு நெருக்கடியான காலம் அது. போரில் பிரித்தானியா தோல்வியை பெற்றுவிட்டது என்று பிரித்தானிய தேசபக்தர்களே கவலை கொண்ட வேளை அது. ஆயினும், பலத்தை அதிகரித்து - புதிய போர்த்திட்டங்களை வகுத்து - போரை எதிர்கொண்டு வெற்றிபெற்றே தீரவேண்டும் என்று அன்றைய பிரித்தானியப் பிரதமர் தீர்மானித்தார்.

கடலிலும், வானிலும், தரையிலும் ஆங்கிலப் படைகள் பாரிய பின்னடைவுகளை அனுபவித்துக் கொண்டிருந்த அந்த நெருக்கடியான காலப்பகுதியில், சேர், வின்சன் சேர்ச்சில் பிரித்தானிய மக்களைப் பார்த்து முழங்கினார்......
'' நாங்கள் கடலிலும் போராடுவோம், தரையிலும் போராடுவோம், வானிலும் போராடுவோம்! '' எனச் சூளுரைத்தார். ஏனெனில், போரின் வெற்றியிற்தான் பிரித்தானிய மக்களின் வாழ்வே தங்கியுள்ளது எனச் சுட்டிக் காட்டி, மக்களைத் தட்டிஎழுப்பி போரைத் தீவிரப்படுத்தினர். இறுதியில், பிரித்தானியா, போரை வென்றது. கடலிலும், வானிலும், தரையிலும் பிரித்தானிய இளைஞர்கள் காட்டிய தீரம் அவர்களுடைய தேசத்துற்கு வெற்றியைப் பெற்றுக்கொடுத்தது.

தமிழீழ விடுதலைப் போராட்டம் சந்தித்துள்ள இன்றைய நெருக்கடிக்கும் மேற்குறித்த சம்பவங்கள் சிறந்த முன்மாதிரிகளாக அமைந்துள்ளன. ○

### 1996 மாநில, மத்திய தேர்தல்கள்;

# பன்மை முகம் கொண்ட

# இந்தியாவின் உண்மை முகம் தெளிவாகின்றது

**உ**லகின் மிகப் பெரிய சனநாயகத் திருவிழா இப்போது ஒருவாறாக முடிவிற்கு வந்துவிட்டது. ஆனால், இத்தேர்தல் முடிவுகள் உணர்த்தும் பாடங்கள், எழுப்பும் உணர்வலைகள், தோற்றுவிக்கும் புதிய அரசியற் சமநிலைகள் இனி முடிவுறாத தொடர்கதையாகப் போகின்றன. முழுமையான அரசியல் மாற்றமொன்றை நோக்கி, இந்திய அரசியல் பயணிக்கத் தொடங்கிவிட்டது. இதுவரை எவரும் கவலைப்படாத, கணக்கிலெடுக்காத, இந்தியாவின் இதயமாக மூலை முடுக்குகளில் வாழும் பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட தலித் மக்கள் எனத் தம்மை அடையாளம் காட்டிய கோடிக் கணக்கான மக்கள் தமது எதிர்காலம் குறித்துப் பெரிதும் கவலைப்படத் தொடங்கிவிட்டனர். இதன் விளைவாகத் தமது அரசியல் முதிர்ச்சியை மிக நுட்பமான முறையில் எவருக்குமே பெரும்பான்மை ஆளும் பலம் கொடுக்காத அரசியல் முடிவாக வெளிப்படுத்தியும் விட்டனர். 59 கோடி வாக்காளப் பெருமக்கள், எட்டு இலட்சத்து இருபத்தையாயிரம் வாக்குச் சாவடிகளிலே வைக்கப்பட்டிருந்த இருபத்தேழு இலட்சம் வாக்குப் பெட்டிகளில் புள்ளடிகளை மட்டும் போடவில்லை; 50 வருடத்தை அண்மிக்கும் இந்திய அரசியல் முறைமை மீதான தமது பகைமையை - மத்தியிலே அதிகாரங்களைக் குவித்து தம்மைக் கிள்ளுக்கீரைகளாக்கி அலைக்கழிக்கும் ஆணவமிக்க அதிகார வர்க்கத்தின் மீதான வெறுப்பை - தாம் குடல் கழுவவே வழியற்றுத் திரியும் போது, கோடி கோடியாக இலகுவாய் பணம் சுருட்டும் ஆட்சியாளர் மீதான எதிர்ப்பையும் புள்ளடிகளோடு சேர்த்தே இட்டனர். இதன் விளைவுகள் இந்தியாவில் மட்டுமல்ல, இந்தியாவின் வாலைப் பிடித்துத் தொங்கும் சிறீலங்காவிலும், ஏனைய தென்னாசியப் பகுதிகளிலும் இனி வரும் காலங்களில் எதிரொலிக்கும்; பல பாடங்களை கற்றுக்கொடுக்கும்.

தேர்தல் நடைபெற்ற 543 தொகுதிகளில் 534 தொகுதிகளின் முடிவுகள் வெளி வந்த நிலையில் ஒரே கூட்டணிமயமாகத் தோற்றமளிக்கும் கட்சி நிலைமைகள் இவ்வாறு தான் உள்ளன. நாடாளுமன்றிலே ஆகக் கூடிய 161 இடங்களைப் பெற்ற பாரதீய ஜனதா, தனது ஆதரவுக் கட்சிகளான சிவசேனை, சந்திரசேகர்-ஜோர்ச் பெர்னாண்டஸ் தலைமையிலான சமதாக் கட்சி, ஹரியான மாநிலக் கட்சியானா ஹரியானா விதாஸ் கட்சி, பஞ்சாப்பில் கொங்கிரசை மண் கவ்வச் செய்த அகாலி தளம் ஆகியவற்றின் ஆதரவோடு 195 இடங்களைப் பெற்றுள்ளது. 1984 ஆம் ஆண்டு இரண்டே இரண்டு இடங்களோடு வரலாற்றை ஆரம்பித்த பாரதீய ஜனதா, இந்துத் தத்துவத்தையும், இந்திய தேசியத்தையும் ஆபத்தான விகிதத்தில் கலநததால் இந்த நிலையை அடைந்து விட்டது.

> *தமிழீழக் கோரிக்கை தொடர்பான தேவையற்ற அச்சத்தை இந்திய அரசியலின் இன்றைய யதார்த்தம் கேள்விக்குறியாக்கிவிட்ட விந்தை நிகழ்ந்து விட்டது.*

அதேவேளை, மூன்றாம் சக்தியாகக் கருதப்படும் தேசிய முன்னணி - இடது கூட்டணியோ பல்வேறு இழுபறிகளின் பின்15 இற்கு மேற்பட்ட கூட்டணிக் கதம்பத்தின் கணக்காக இந்திய ஜனாதிபதிக்கு 180 இடங்களைக் காட்டி நிற்கின்றது. ஜனதா தளம், இந்திய மாக்சிய கொம்யூனிஸ்ட் கட்சி, (CPM) தலைமையிலான கட்சிகள் இந்திய கொம்யூனிஸ்ட் கட்சி, (CPI) என்பவற்றை விடவும் உறுதியான மாநிலக் கட்சிகளான உத்தரப் பிரதேசத்தின் மூலயம் சிங் யாதவ்வின் சமாஜவாதக் கட்சி (S.P.)சந்திரபாபு நாயுடுவின் தெலுங்கு தேசக் கட்சி (JDP), அசாமின் அசாம் கண பரிசத், தமிழகத்தில் தி மு க மூப்பனார் காங்கிரஸ் என்பவை இணைந்தே இக் கணக்கை காட்டுகின்றன. இம்முறை வரலாறு காணாத தோல்வியைப் பெற்ற கொங்கிரஸ் பெற்றதே 136 தொகுதிகள் மட்டுமே இம்முறை தேர்தலின் சிறப்பு அம்சமே தேசியக் கட்சிகள் என்ற சிறப்பு அடை மொழி பெறாத மாநிலக் கட்சிகள் 100 மேற்பட்ட இடங்களை பெற்றமையே.

எனவே, அறுதிப் பெரும்பான்மை என்கிற 270 இலக்கினை எக்கட்சியையும் எட்ட இந்திய வாக்காளர் விடாத நிலையில் பாரதீய ஜனதா இப்போதுதற்காலிக அரசை அமைத்துவிட்டது. தனது கூட்டணிகளோடு, கொங்கிரசிலிருந்தும் பலரைப் பிரிதெடுக்கும் முயற்சிகளிலும் அது ஈடுபடுவதாகவும் தெரிகின்றது. அதேவேளை பாரதீய ஜனதாவின் தற்காலிக அரசை மேவி, நாடாளுமன்றில் தனது பெரும்பான்மையை நிரூபித்து தேசியஇடது முன்னணியும் ஆட்சி அமைக்க முயல்கின்றது. பாரதீய ஜனதா பதவிக்கு வந்தால் தான் மோசமாக பழிவாங்கப்படும் அபாயமிருப்பதால், அதனைத் தடுக்கவெளியில் இருந்து கொங்கிரஸ் இம்முன்னணிக்கு ஆதரவு தரக்கூடும் என்கிற எண்ணமும் இதற்கு ஆதவாகக் கருதப்படுகின்றது. இவை எவ்வாறு இருந்தாலும் கொங்கிரசை உடைக்க எல்லாத் தரப்பும் முயல்வதும் பணத்தால் ஏனையோரை விலைக்கு வாங்கிய ராவுக்கு இப்போது தனது ஆட்களே விலைபோகும் நிலை மறுத்தானாகத் தோன்றி இருப்பதும், எவர் ஆண்டாலும் ஆட்சி 18 மாதத்திற்கு மேல் நீடிக்க முடியாத அபாயமிருப்பதும் எத்தகைய இக்கட்டானஇடர் நிலையில் இந்திய அரசியற் கட்சிகளை வாக்காளர் தள்ளிவிட்டுள்ளனர் என்பதுமே எமக்கான செய்திகள் ஆகின்றன. நிலையான ஆட்சி மத்தியில் அருகிப் போவதே இனி வழமையாகிவிடும்.

இவை எவ்வாறிருப்பினும், இந்திய அரசியலோடு இரண்டறக் கலந்துவிட்ட கொங்கிரசின் படுதோல்வி உணர்த்தும் பாடங்கள் பல. மூன்று பிரதமர்களைக் கண்ட நேருபரம்பரையின் உறுதிப்படுத்தப்பட்ட வீழ்ச்சி, மரபுவாத இந்திய அரசியற் பாரம்பரியமான உயர்சாதி ஆட்சியினதும்-மேட்டுக்குடி அதிகாரவர்க்கத்தினதும்-வீழ்ச்சி மத்தியில் உறுதியான ஆட்சி என்கிற மாயையின் வீழ்ச்சியெனப் பலவாறாக இவை நீள்கின்றன. எனவே, கொங்கிரஸ் பெற்ற வீழ்ச்சியின் பொருள் என்ன? இந்தியாவின் முதற் பொதுத்தேர்தல் 1951 ஒக்ரோபர்மாதம் நடைபெற்ற போது 44.5 விழுக்காட்டு வாக்குகளைப் பெற்று அப்போதிருந்த 480 தொகுகளில் 75 விழுக்காட்டினைத் தன்வசமாக்கிய கட்சி, இம்முறை, 30 விழுக்காட்டை அண்மித்த வாக்குகளையும் 23 விழுக்காட்டு ஆசனங்களையுமே பெற்று நிற்கின்றது. 35 நாடாளுமன்றத் தொகுதிகட்கு மேல் கொண்ட7பெரிய மாநிலங்களான உத்தரப்பிரதேசம், பிகார், ஆந்திரா, தமிழ்நாடு, மகாராஸ்ட்ரம், மேற்குவங்கம், மத்திய பிரதேசம் என்பனவற்றில் முதல் ஆறும் ஏற்கெனவே கை கழுவிய பின், எஞ்சியிருந்த மத்தியப் பிரதேசத்திலும் இம்முறை பலத்த அடி. நடுத்தர மாநிலங்களான ராஜஸ்தாஸ், குஜராத், கர்நாடகம் போன்றவை ஏற்கெனவே இழக்கப்பட்ட பின் மிஞ்சியிருந்த ஓரிசா, கேரளாவில், கேரளாவும் இம்முறை பறிபோய்விட்டது. அதாவது, இம்முறை சட்டசபைக்கான தேர்தல் நடைபெற்ற மாநிலங்களில் ஒன்றைக்கூடத் தக்க வைக்க முடியவில்லை. (ஹரியானா, கேரளம், புதுவை எல்லாம் இம்முறை பறிபோய்விட்டன.)

இவற்றின் பொருள் என்ன? இதுவரை காலமும் ஒற்றை முகம் காட்டிய இந்திய தேசியம் எனும் மாயை உடைக்கின்றது. பல்வேறு தேசிய இனங்களை, தனித் தன்மை வாய்ந்த இனக் குழுக்களைக் கொண்ட பன்மை முகம், இந்தியாவின் உண்மை முகம் என்பது தெளிவாகின்றது. இந்தியாவின் ஒருமைப்பாடு என்பது பொத்தல் விழுந்த கூடாரமாகிவிட்டது. இப்போதுமிகத் தெளிவான இருபோக்குகள் மேலெழுகின்றன. இந்தியாவோடு வலுக்கட்டாயமாக இணைக்கப்பட்ட 7 வடகிழக்கு மாநிலங்கள் காஷ்மிர் போன்றவை தம்மை விடுவிக்க நடத்தும் விடுதலைப் போராட்டங்கள் ஒருபுறம், மறுபுறம், பரந்த நிலப்பரப்புக்களைக் கொண்ட மாதிலங்களில் கோடிக்கணக்கான பல்வேறு தேசிய இனங்கள் திணிக்கப்பட்ட நிலையில் மாநிலங்கட்குள்ளே மாநிலம் கோரியும், மாநிலக்கட்கு அதிக அதிகாரம் கோரியும் நடக்கும் போராட்டங்கள் உத்தரப் பிரதேச மலை வாழ் மக்களின் உத்தரா கன்ட், அசாமின் ஆதிக்குடி போடோ மக்களின் போடோலாந்து, பிகாரின் யார்க்கன்ட், மேற்கு வங்கத்தின் கூர்க்காலாந்து என்கிற தனி மாநிலக் கோரிக்கைகள் வலுவாக மேலெழும் பின்னணியிலே இத்தேர்தல்முடிவுகளை நாம் கவனிக்க வேண்டும். ஏனெனில், உலக அளவிலே பார்க்குமிடத்து கூட தனியான தேசியங்களுக்குரிய சகல பண்புகளையும் கொண்டிருக்கும் இம் மக்கள், உலகிலுள்ள பெரும்பான்மை நாடுகளை விட மிகக் கூடுதலான சனத்தொகையை கொண்டவை. இந்த யதார்த்தமே இம் முறை பல்வேறு மாநிலக் கட்சிகளின் வளர்ச்சிப் போக்கு புலப்படுத்தும் புதிய பரிமாணமாகின்றது. எனவே தேசிய, இடது முன்னணி பதவியேற்றால் வி.பி.சிங் பிரதமர் பதவியை ஏற்க மறுக்கும் நிலையில் பிரதமராகக் கூடும் எனக் கருதப்பட்ட ஜோதிபாசு என்ன கூறுகின்றார்? 80 வயதைக் கடந்த பாசு 1977 ஆம் ஆண்டிலிருந்தே மேற்கு வங்கத்தின் முதலமைச்சராகத் தொடரும் (இம் முறையும் கூட) நிலையில் கூறுவது இதுதான். " மத்தியிலே குவிந்திருக்கும் அதிகாரங்கள் மாநிலங்கட்கு முழுமையாகக் கை மாற்றப்படவேண்டும். இந்திய அரசியல் யாப்பு பூரண இணைப்பாட்சித் தன்மை கொண்டதாக மாற்றப்பட வேண்டும்."

இப்போது தமிழீழத்தின் கதையையும் பார்க்கலாம். நரசிம்மராவே பதவிக்கு வரவேண்டும்; வருவார் என நம்பிய சிங்களத்தின் கதை கனவாகி விட்ட நிலை தெரிந்த கதை. ஆனால் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு சிறீலங்காவைவிடவும் இந்தியாவே பெரும் தடையெனச் சொல்லும் அளவிற்கு ஏன் இந்தியா நடந்து கொள்கின்றது என்பதற்கான பிரதானகாரணம், இந்திய மாநிலங்கட்குள்ளதை விட கூடுதலாக அதிகாரங்கள் தமிழர் தாயகத்திற்கு கிடைத்தால் ஏற்படும் பின் விளைவுகள் பற்றிய அச்சமே எனப்பட்டது. பின்னர், 1991 ஆம் ஆண்டின் பின் ராஜீவ்கொலை வழக்கும் புதிதொரு காரணமாக சேர்த்துக்கொள்ளப்பட்டது. ஆனால் இம்முறை தேர்தல் முடிவுகள் இக் காரணங்களை எல்லாம் செல்லாக் காசாக்கி அடிபட்டுப் போகச் செய்துவிட்டன இப்போது இந்தியாவின் நிலை என்ன? வழமையான தனிநாட்டுப் போராட்டங்கள் ஒரு புறமிருக்க மாநிலங்கட்குள்ளே வலுவான மாநிலக் கோரிக்கைகள், மாநிலங்கட்கு கூடிய அதிகாரம் கோரும் கோரிக்கைகள் இந்திய அரசியலில் மேலெழும் தலைமைச் சக்திகளாகி விட்டன. இன்றைய இந்திய அரசியலின் யதார்தம் இது. இவ் யதார்த்தம் தமிழீழக் கோரிக்கை தொடர்பான தேவையற்ற அச்சத்தை தொடர்பற்றதாக்கிவிடும் விந்தையும் நிகழ்கின்றது.

**வே. பாலகுமாரன்**

இதுபோலவே விடுதலைப் புலிகள் ராஜீவ் கொலை சம்மந்தப்பட்டதாகக் கூறப்பட்ட குற்றச்சாட்டுக்கள் ஒருபுறம், ராவ் இவ் வழக்கில் கவனம் செலுத்தவில்லையென்கிற, சோனியாவின் கசப்புணர்வு மறுபுறமாக சோனியாவின் ஆசியோடு களத்தில் இறங்கிய இந்திரா திவாரி கொங்கிரஸ் பெற்ற மரண அடி, எதனைக் குறிக்கின்றது? ராஜீவ் கொலை வழக்கில் கலைஞர் தொடர்புபட்டதாக வாழப்பாடியும், ராஜீவை கொன்றவர்க்கா உங்கள் வாக்கு என கேள்வி எழுப்பிய ஜெயலலிதாவுக்கும் என்ன நடந்தது? என். டி திவாரியோடு சேர்த்து இரண்டொருவரைத் தவிர அர்ஜீன்சிங் தொட்டு வாழப்பாடிவரை சுப்பிரமணியசுவாமி உட்பட மண் கவ்விய செய்திகள் சொல்லும் கதையும் நாமறிய வேண்டியவை தான். இனிவரும் காலங்களில் ராஜீவின் 'போபர்ஸ்', 'கவாலா' ஊழல்தொட்டு ஜெயின் ஆணைக்குழுவரை வெளிவரப்போகும் உண்மைகள் எவர்எவருக்கு எதிரியென்பதைத் தெளிவுபடுத்திவிடும்.

இவற்றைவிட முக்கியமான விளைவாக அமையப்போவது, புதுடில்லியில் ஆண்டாண்டு காலமாக அழுங்குப் பிடியாக ஆளும் நிர்வாக அதிகாரத்தைப் பற்றி நிற்கும் பார்ப்பனிய மேட்டுக்குடி அதிகார வர்க்கத்தின் எதிர்காலமே. பல அரசியல் ஆய்வாளர்கள் குறிப்பிடுவது போல தாம் ஒருபோதும் தண்டிக்கப்படமாட்டோம். தட்டிக் கேட்கப்படமாட்டோம் என்கிற ஆணவத்திலே எத்தனை அழிவுகளை இக்குழு மேற்கொண்டது. 1984 ஆம் ஆண்டு இந்திராகாந்தி கொல்லப்பட்டபின் டெல்லியில் பல்லாயிரம் சீக்கியர் படுகொலை; - இந்தியப்படையின் தமிழீழத் தலையீடும் மக்கள் படுகொலையும்; றோவின் அத்துமீறிய தலையீடுகள் - ராஜீவின் போபர்ஸ் ஊழல்; ராவின் காலத்தைய பங்குச் சந்தை கவாலா போன்ற பல ஊழல்கள் என இவர்களின் பயங்கரவாதப் பட்டியல் நீள்கின்றன. இந்த வர்க்கமே கொங்கிரஸ் எனும் தேரின் அச்சாணியாகும். இப்போது தேரும் சிதிலமாகி அச்சாணியும் உடையும்நிலை. பிரபல ஆய்வாளர் ஒருவர் குறிப்பிட்டதுபோல இந்தியக் குடிமகன் முன் இவர்கள் பதில்சொல்லும் காலம் நெருங்குகின்றது.

எனவே அடக்குமுறையும், நெடுஞ்சாலைகளும், நீண்ட புகையிரதப் பாதைகளும், ஜெய்கிந்த் என்கிற போலிக் கருத்துருவமும் உருவாக்கிய இந்திய தேசியம், பெருத்த இக்கட்டில் இன்றுள்ளது. ஒரு கால கட்டத்தில் இந்தியாவின் இழிநிலையை அவதானித்த கார்ல்மாக்ஸ் ஒருவேளை இந்தியாவில் புரட்சி நடந்தாலும் நடக்கும் என்றார். மாக்ஸ் சொன்ன கருத்தியல் புரட்சி இந்தியாவில் நடக்காவிட்டாலும் பலபத்து தேசிய இனங்களை இந்தியா எனும் உறைக்குள் திணித்த தொடர்கதையின் முடிவு நெருங்குகின்றது முடிவுறாத புரட்சி ஒன்றின் முடிவின் தொடக்கமிது. O

## பௌத்தமும் - தமிழர்களும்

"பௌத்தபிக்குகள் வெளிநாடுசென்று போதனைகளில் ஈடுபடுவதற்குப் பதிலாக வடக்கு - கிழக்கிற்குச்சென்று உபதேசங்கள் செய்வதில் ஈடுபட்டிருந்தால், இன்றைய பயங்கரவாதம் ஏற்பட்டிருக்க வழி ஏற்பட்டிருக்காது"

சிறீலங்காவின் இராஜதந்திரசேவையில், நீண்டகாலம் பணியாற்றியவரும், தற்போதய தென்மாகாண சபை ஆளுநருமான திருவாளர் நெருவில் கனகரட்ணாவின் கூற்றே மேற்குறித்த பகுதியாகும்.

புத்தரின் போதனைகள் தமிழ் மக்களுக்கு அந்நியமானவை என்ற ஒரு தவறான அபிப்பிராயம் மேற்குறித்த கூற்றிற் தென்படுகின்றது. அத்துடன், அகிம்சையை அடிநாதமாகக்கொண்ட புத்தரின் போதனையும், வன்முறையை அடித்தளமாகக்கொண்ட சிங்கள பௌத்த போதனையும் ஒன்றுதான் என்கின்ற ஒரு திரிபையும், நெருவில் கனகரட்ணா செய்ய முனைந்துள்ளார்.

ஒரு காலத்தில், பௌத்தமதம், தென்னிந்தியாவில் - குறிப்பாகத் தமிழ்நாட்டில் - பரவியிருந்தது என்று வரலாறு காட்டுகின்றது.

சிலப்பதிகாரத்தின் நாயகி கண்ணகியின் மகள் மணிமேகலை, பௌத்த சமயத்திற்கு மாறி - பிக்குனியாக இருந்து - புத்தரின் போதனைகளை மக்களுக்குப் போதித்து வந்தார் என, இலக்கியவரலாறு எடுத்து இயம்புகின்றது.

தமிழ்மொழியிலுள்ள இலக்கியப் பொக்கிசங்களில் பௌத்த மதததுக் காப்பியங்களும் அடங்கி உள்ளன என்பது, இன்றைய சந்ததி அறிய வேண்டிய ஒன்று.

ஈழத்தமிழரின் முன்னோர்களில் ஒரு பகுதியினர் பௌத்த போதனைகளைத் தமது வாழ்வு நெறியாகக் கடைப்பிடித்திருந்தனர் என்பதற்குக் கந்தரோடை அகழ்வாராய்ச்சி சான்றுபகர்கின்றது.

இன்று, சிங்களவர்களில் பெரும்பான்மையினர் கடைப்பிடித்தொழுகும் தேரவாத பௌத்தத்தின் சித்தாந்தச் செழுமைக்குத் தமிட் பிக்குகள் வழங்கிய பங்களிப்பு சாதாரணமானதல்ல. அந்த அளவுக்கு தமிழுக்கும் - பௌத்தத்திற்குமிடையேயான உறவு, ஒருகாலத்தில் மிகவும் நெருக்கமாக இருந்திருக்கின்றது.

## செய்தி ஆய்வு

கௌதம புத்தரின் போதனைகள், மத வரையறைகளுக்கு அப்பால், உலகின் அறிஞர்களால் வியந்து பாராட்டப்படும் ஒரு உயர்ந்த சிந்தனை என்பதில் ஐயமில்லை.

புத்தர், உயிர்க்கொலையை எதிர்த்தார்; அன்பைப் போதித்தார்; வன்முறையை நிராகரித்தார்; அகிம்சை வழியைக் காட்டினார்.

புத்தரின் இப்போதனைகளை மக்களுக்கு எடுத்துக்கூறி, காருண்ணியம் மிக்க உலக சமூகத்தை உருவாக்குவதைத் தமது முழுநேரப் பணியாகக் கொண்டவர்கள் பௌத்ததுறவிகள்;

எனினும், புத்தரின் போதனைகளுக்கு முரணானதாகவே சிங்கள - பௌத்தபிக்குகளின் செயற்பாடுகள் உள்ளன.

கலிங்கத்துப்போரின் பேரழிவுகளைக் காட்டி, அசோகச் சர்க்கரவத்தியின் கண்களைத் திறக்க வைத்த பௌத்த துறவிகள் அல்ல, சிங்கள பௌத்தப் பிக்குகள் -

போர்க்களத்திற்கு வந்து சிங்களப் படைகளின் வெற்றிக்காக ஆசிகூறி - பிரார்த்தித்து- தமிழர்கொலையைத் தூண்டுபவர்கள்தான் சிங்கள பௌத்தப் பிக்குகள்.

தமிழரின் பிரச்சினையை அகிம்சை வழியிற் தீர்க்க விடாது, போர் மூலமே அது தீர்க்கப்படவேண்டும் என்று உயிர்க்கொலைக்குக் களம் அமைத்துக் கொடுப்பதிலேயே சிங்கள - பௌத்தப் பிக்குகள் ஈடுபடுகின்றனர்.

இந்த வகையில், அரசபயங்கரவாதத்தின் ஊக்கியாகச் செயற்படும் சிங்கள பௌத்தப் பிக்குகள், நெருவில் கனகரட்ணா விரும்புவதுபோல வடக்கு கிழக்கில் எதைப் போதிக்கப்போகின்றார்கள்?

'பயங்கரவாதம்' என்று சிங்களவர்களால் நோக்கப்படும் தமிழரின் விடுதலைப் போருக்கும் பிரதான காரணம் சிங்களப் பேரினவாதமாகும். சிங்கள - பௌத்தப் பேரினவாதத்தின் சித்தாந்தக்காவலர்கள், பிக்குகள் ஆவர்.

தமிழரின் இனப்பிரச்சினையை சுமூகமாகத் தீர்க்கப்படக்கூடிய சூழல் ஒன்று உருவாக வேண்டுமாயின், முதலில், பௌத்த பிக்குகள் புத்தரின் போதனைகளை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். சாதாரண சிங்களவர்களின் இதயத்தில், பேரினவாத வெறியை ஊட்டுவதை நிறுத்த வேண்டும். மதத்திற்குள் அரசியலைக் கலப்பதைக் கைவிட வேண்டும்.

இவற்றைச் செய்துவிட்டு - புத்தரின் போதனைகளை மட்டும் பிக்குகளிடம் கொடுத்து, அவர்களை நெருவில் கனகரட்ணா, வட - கிழக்கிற்கு அனுப்பிவைக்கட்டும். ஏதாவது பயன் கிடைக்கலாம். ○

## கணக்கும் - கதையும்

"வலிகாமத்தில் ஒரு இலட்சம் மக்களே வசித்தனர்." இது சந்திரிகா அம்மையாரின் வாய்மொழி.

"வலிகாமத்தில் இருந்து 5 இலட்சம் மக்கள் வெளியேறினர்" என, புலிகள் உலகிற்கு அறிவித்தபோது... .. "இல்லையே ..... அங்கே ஒரு இலட்சம் மக்கள் மட்டுமே வசித்தனர்." என்று அபாண்டமான ஒரு பொய்யை அம்மையார் கூறியிருந்தார்.

ஆனால் இப்போது, "இரண்டரை இலட்சம் மக்கள், வலிகாமத்திலுள்ள தமது வீடுகளுக்குத் திரும்பிவிட்டனர்." என, அம்மையாரும் - ரத்வத்தவும் அறிவிப்புச் செய்துள்ளனர்.

இது ஒருபுறம் இருக்கட்டும்!

கடந்த டிசம்பர் மாதம் - படையினர் வலிகாமத்தை ஆக்கிரமித்தபின்னர் - ரத்வத்த ஒரு அறிவிப்பை விடுத்திருந்தது இங்கே கவனத்தில் கொள்ளத்தக்கது.

"யாழ்ப்பாணத்தில், முன்னர் 85,000 சிங்களவர்கள் இருந்துள்ளனர். அவர்கள் மீண்டும் யாழ்ப்பாணத்தில் வசிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்" என்பதே ரத்வத்தவின் அறிவிப்பாகும்.

1981 ஆம் ஆண்டு, அன்றைய அரசு எடுத்த குடிசன மதிப்பீட்டின் பிரகாரம், யாழ்ப்பாணத்தில் 15.000 சிங்களவர்கள் வசித்துள்ளனர் என அறியக்கிடைக்கின்றது. அரச ஊழியர்களாகவும், தொழிலாளிகளாகவும், குறைந்த எண்ணிக்கையுடைய சிலர் திருமணப்பந்தம் காரணமாகவும் யாழ்ப்பாணத்தில் வசித்துள்ளனர்.

15,000 சிங்களவர்கள் யாழ்ப்பாணத்தில் வசித்தனர் என்ற எழுத்துமூல உண்மைக்குப்புறம்பாக, 85,000 சிங்களவர்கள் அங்கே வாழ்ந்தனர் என்று ஏன் ரத்வத்த கூட்டிக்காட்டியுள்ளார்?

'வலிகாமத்தில் ஒரு இலட்சம் தமிழர்களே வாழ்ந்தனர்' என்ற சந்திரிகாவின் கூற்றிற்கும், 'யாழப்பாணத்தில் 85,000 சிங்களவர்கள் வாழ்ந்தனர்' என்ற ரத்வத்தவின் அறிவிப்பிற்கும் இடையே ஏதாவது உள்நோக்கம் இருக்குமோ?


யாழ்ப்பாணம் கைப்பற்றப்பட்ட சாக்கில், மீளக்குடியமர்த்தல் என்ற போர்வையில் பெருந்தொகையான சிங்களவர்களைக் குடாநாட்டிற் குடியிருத்தும் ஆசை ரத்வத்தவுக்கு இருக்கலாம். அல்லது, சிங்கள மூதாதையர்களுக்குச் சொந்தமாக இருந்த கிழக்கை, தமிழ் ஆக்கிரமிப்பாளர்கள் இப்போது கையகப்படுத்திவிட்டனர் என, இனவாதப் பேராசிரியர் கே. எம். டி. சில்வா பாணியில், யாழ்ப்பாணத்தில் தமிழரும் சிங்களவரும் ஏறக்குறைய சமஅளவில் இருந்தனர் என்று, அம்மையார் ஒரு விசக் கருத்தை விதைக்கின்றாரோ தெரியவில்லை?

தமிழரின் கலாசார மையங்களுள் பிரதான இடத்தை வகிக்கும் யாழ்ப்பாணத்தைச் சிங்களமயப்படுத்தும் முயற்சிகளை மேற்கொள்வதன் மூலம், தமிழர்தேசியத்தைச் சுலபமாக நசுக்கிவிடலாம் என்றொரு இனவாதச் சித்தாந்தம் - பன்னெடுங்காலமாக - இருந்துவருகின்றது. சிங்களப் பாடசாலைகளைத் திறந்து - புத்தவிகாரைகளைக் கட்டி - யாழ்ப்பாண மண்ணிற் சிங்கள பௌத்த ஊடுருவலைச் செய்ய, முன்னர் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அத்துடன், அங்கொன்றும் இங்கொன்றுமாக யாழ்மண்ணிற் சிங்களக் குடியிருப்புக்கள் சிலவற்றை உருவாக்க ஆட்சியாளர்கள் எடுத்த முயற்சிகளும், போராட்ட முனைப்பால், இல்லாது போய்விட்டன.

இப்போது, இராணுவபலத்தைப் பயன்படுத்தி இனஅழிப்பை, சமூகச்சிரழிப்பை யாழ் மண்ணில் விதைக்கப் படையினர் முயற்சிகளை மேற்கொள்கின்றனர். ஆனால், எத்தனையோ ஆக்கிரமிப்புக்களுக்கும், எத்தனையோ பண்பாட்டுப் படையெடுப்புக்களுக்கும் தாக்குப்பிடித்த யாழ்ப்பாணச் சமூகத்திடம், சிங்களப் பேரினவாதத்தின் நாச வேலைகள் எடுபடாது என்பதே உண்மையாகும். இத்தகைய திட்டமிட்ட சிரழிப்புகள் தொடர்பாக எமது மக்களும் எச்சரிக்கையாக இருக்கவேண்டிய தேவையும் உள்ளது. ○

### பிழை திருத்தம்

"சர்வதேச அரசியலிற் பயங்கரவாதம் படும்பாடு' என்ற தலைப்பிலான - கடந்த இதழ் செய்தி ஆய்வில் ..... இஸ்லாமியர் தரப்பில் ஹமாஸ் ஹிஸ்புல்லா என்பதுபோல, யூதர் தரப்பில் ககேன் கச் எனப்படும் தீவிரவாத மத அமைப்புக்கள் இயங்குவது ஒன்றும் தெரியாத கதை அல்ல என்ற சரியான வாக்கியத்திற்குப் பதிலாக .. இஸ்லாமியர் தரப்பில் ககேன், கச் எனப்படும் தீவிரவாத மத அமைப்புக்கள் இயங்குவது ஒன்றும் தெரியாத கதை அல்ல' என தவறாக அச்சிடப்பட்டுவிட்டது. தவறுக்கு வருந்துகின்றோம்.



# போரும் - தந்திரோபாயங்களும்

புகழ்மிக்க பொன்மொழி ஒன்றைக் கூறுவார் மாஓசேதுங். அதை நினைவிலிருத்திக் கொள்ள வேண்டும்.

> " ஆட்களைத் தக்க வைத்து
> நிலப்பரப்பை இழப்பதால்
> ஆட்களையும் நிலப்பரப்பையும்
> தக்கவைக்கலாம்.
> ஆட்களை இழந்து நிலப்பரப்பைத்
> தக்க வைத்தால,
> ஆட்களையும் நிலப்பரப்பையும்
> இரண்டையுமே இழக்க
> நேரிடும் ".

1947 ஆம் ஆண்டில் யேனான் சமரை நெறிப்படுத்தும் பொழுது அவர் இதைக் கூறினார்.

அந்த வருடம் மார்ச் மாத முற்பகுதியில், ஷான்சி - கன்சு - நிங்சியா கொம்யூனிஸ்ட் பிரதேசத்தைத் தாக்குவதற்கென சியாங்கேய்சேக் 230,000 பேர்களடங்கிய முப்பத்துநான்கு பிரிகேட்டுகளை ஒன்று சேர்த்தார். தாக்குதலின் பிரதான குறியிலக்கு மாஓவின் குகையான (மலைப்பிரதேச இருப்பிடமான) யேனான் ஆகும்.

ஹூசொங்நான் என்பவரின் கொமாண்டின்கீழ் பதினைந்து கோமின்தங் பிரிகேட்டுகள் யேனான் மீது படையெடுத்தன. யேனானைப பாதுகாத்து நின்ற கொம்யூனிஸ்ட் இராணுவத்தின் தொகை கோமின்தங் இராணுவத்தின் தொகையில் பத்தில் ஒன்றேயாகும். ஆகவே, யேனானிலிருந்து வெளியேறி எதிரியை கொம்யூனிஸ்ட் பிரதேசத்திற்குள் ஆழமாகக் கவர்ந்திழுப்பதென மாஓ முடிவு செய்தார். பின்னர் எதிரிப்படைப் பிரிவுகளை ஒவ்வொன்றாக அழித்து விடுவதே அவரது முடிவாகும்.

மிடத்திற்கு எதிரிகள் வந்து சேர்ந்து துப்பாக்கிச் சத்தம் தெளிவாகக் கேட்கும் வரை அவர் தனது நிலையிலேயே இருந்தார்.

யேனான் ஷான்சி - கன்சு - நிங்சியா எல்லைப்பிரதேசத்தின் மீது எதிரி மேற்கொள்ளும் தாக்குதல் பற்றி மாஓ பின்வருமாறு சுட்டிக் காட்டினார். '' முதலில் வடமேற்குப் பிரச்சினையைத் தீர்த்துவைப்பதற்கும், எங்கள் கட்சியின் வலது கரத்தைத் துண்டிப்பதற்கும், வடகிழக்கிலிருந்து எங்கள் கட்சியின் மத்திய அதிகாரசபையையும்- மக்கள் விடுதலை இராணுவத்தின் பொதுத் தலைமைச் செயலகத்தையும் விரட்டியடித்துப் பின்னர் எங்களின் படைகளை ஒவ்வொன்றாகத் தோற்கடிக்கும் குறிக்கோள் நிறைவேற்றத்திற்குமாக, தனது படைகளை நகர்த்தி வடசீனாவைத் தாக்கலாமென எதிரி எண்ணுவது வீண் முயற்சியாகும்.''

மார்ச் மாதம் 12 ஆம் திகதி 40,000 பேரைக் கொண்ட பிரதான தாக்குதற் படைக்குத் தலைமைவகித்த ஹூசொங்நான் இரண்டு நீளணிகளாக லோச்சுவான், யீச்சுவான் வழியே யேனானை வந்தடைந்தார். அவர்களுக்கு உதவியாக மாஹொங்கியின் பன்னிரண்டு டிவிஷன்களும், யூலினிலிருந்து 22 ஆவது கோவின் இரண்டு டிவிஷன்களும் மேற்கிலும் வடக்கிலுமிருந்து யேனான் மீது படையெடுத்தன. அது மாத்திரமல்ல, கோமின்தங் நூற்றுக்கு மேற்பட்ட குண்டுவீச்சு விமானங்களை யேனான் மீதும் அண்மையிலும் குண்டுகளைப் பரந்தளவில் வீசுவதற்காக அனுப்பியது.

யேனானைக் கைப்பற்றிய பின்னர் ஒரு முடிவான சமரில் கொம்யூனிஸ்ட் இராணுவத்தின் பிரதான படையை எதிர் கொண்டு மோதுவதற்காக ஹூசொங்நானின் இராணுவம் மிக ஆவலோடு தேடுதல் நடத்தியது. கொம்யூனிஸ்டுகளின் வடமேற்குக் கள இராணுவம் ஓர் ஆழம் காண இயலாத நகர்வுத் தந்திரோபாயத்தைக்

நகர்த்தினார். ஹூசொங்நான், பான்லொங், சிங்காபியன் ஆகிய இடங்களின் வடமேற்கு பிரதேசத்திலுள்ள வடமேற்கு கொம்யூனிஸ்ட் இராணுவத்தின் பிரதான படையணியைத் துடைத்தொழிப்பதற்காகவே அவர் இந்த நகர்வை மேற்கொண்டார். எதிரியின் பிரதான படையணியை மேற்கு நோக்கி இழுப்பதற்காகத் தனது படைகளில் ஒரு பகுதியைப் பயன்படுத்திய கொம்யூனிஸ்ட் இராணுவம் தனது படைகளிற் பெரும் பகுதியை வேயாபோவிற்குத் தெற்கே ஒரு பதுங்கித் தாக்குதலுக்காக நிலைகொள்ளச் செய்தது. ஏப்ரல் 14ஆம் திகதியன்று 4,700 பேரைக்கொண்ட ஹூசொங்நானின 135ஆவது பிரிகேட் அதன் தெற்கு நோக்கிய அணிநடையில் யாங்மாகி பிரதேசத்துள் நுழைந்தது. எட்டு மணித்தியாலக் கடும் சண்டையின் பின்னர் கொம்யூனிஸ்ட் இராணுவம் அவர்களை முற்றாகத் துடைத்தொழித்துவிட்டது.

கொம்யூனிஸ்ட்கட்சி மத்திய அதிகார சபையும் வடமேற்கு கொம்யூனிஸ்ட் இராணுவத்தின் பிரதான படையணியும் மஞ்சள் நதியைக் கடந்து கிழக்கு நோக்கி நகர எத்தனிக்கின்றன என நம்பிய சியாங்கேய் ஷேக், ஏப்ரல் மாதக்கடைசியில் ஹூசொங்நானின் படைகளை சியான்யாங் - யூலின் நெடுஞ்சாலை வழியே வடக்கு நோக்கியும், 22ஆவது கோவை யூலினிலிருந்து தெற்கு நோக்கியும் விரைந்து செல்லுமாறு உத்தரவிட்டார். அப்படி விரைந்து சென்று பிக்சியன், வூபோ பிரதேசங்களில் வைத்துக் கொம்யூனிஸ்ட் இராணுவத்தை ஓர் இடுக்கிக்குள் பிடித்துக் கொள்ள வேண்டும் அல்லது, அதை மஞ்சள் நதிக்கு குறுக்கே கிழக்கு நோக்கி நகர்த்த



> " எங்களைப் பாதுகாப்பது எதிரியை அழிப்பதற்கே! மூலோபாயப் பின்வாங்கலின் குறிக்கோள். இராணுவ வலுவைத்தேக்குவதற்கும், முறியடிப்புத் தாக்குதலை மேற்கொள்வதற்கான தயார்ப்படுத்தலைச் செய்வதற்குமேயாகும். "
>
> மாஓ சேதுங்

எதற்காக மாஓ யேனானைக் கைவிட முடிவு செய்தார் என்பதை அப்போது மக்களால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. அத்தோடு அந்த இடத்தை விட்டு அகல, அம்மக்கள் விருப்பமில்லாமலுமிருந்தனர். மிகவும் பொறுமையுடன் அவர் பின்வருமாறு விளக்கினார். '' நாங்கள் யேனானில் பத்து வருடங்களாக வாழ்ந்து விட்டோம். குகைகளில் வதிவிடங்களை அமைத்து சோளம் தானியத்தை விதைத்து, இங்கிருந்து கொண்டே நாடு தழுவிய புரட்சியை நெறிப்படுத்தினோம். முழுச் சீனாவுக்கும், உலகிற்கும் யேனான் இருப்பது தெரியும். நாங்கள் அதைப் பாதுகாக்க வேண்டும். ஆனால் சாகும் வரை அதைப் பாதுகாத்து நிற்கப் போவதில்லை. ஒரு சமரின் பலாபலன் ஒரு நகரத்தை அல்லது நிலப்பரப்பை இழப்பதிலோ அல்லது கைப்பற்றுவதிலோ தங்கி நிற்கவில்லை. மாறாக எதிரியின் ஆக்கவலுவை முதுகெலும்பை உடைத்தெறிவதிலேயே தங்கியுள்ளது.'' இப்படி அவர் மீண்டும் மீண்டும் விளக்கமளித்தார்.

அவர் தொடர்ந்து கூறினார். '' எதிரியிடம் 230,000 வீரர்களுண்டு. எங்களிடம் 20,000 பேர் மட்டுமே உண்டு. 230,000 பேரை 20,000 பேர் அழித்துவிடுவதென்பது சாத்தியமற்ற விடயம். எதிரியை வெற்றிகொள்ள வேண்டுமெனில், நாங்கள் சண்டை செய்யும் சரியான வழிமுறையை மேற்கொள்ள வேண்டும். இப்பொழுது எதிரியை உளரீதியாகச் சித்திரவதை செய்வதென்பது உங்களிலேயே தங்கியுள்ளது. அவனுக்கு வழியைக் காட்டி, அவனை வெறுமனே உங்களைச் சுற்றச் செய்து அவனைக் களைக்க வையுங்கள். இந்த வழிமுறை தேய்வும் சிதைவும் என்பதாகும். வடஷான்சியில் மலைகள் உயரமாகவும் தெருக்கள் ஒடுக்கமாகவும் இருக்கின்றன. எதிரிகளை நீங்கள் மலைகளுக்குக் கவர்ந்திழுத்துச் செல்லுங்கள். வெகு உயரத்திற்கு மலைகளில் ஏறிக் களைப்புற்று, பசியுடனிருக்கும் பொழுது அவனை அழித்து விடுவதற்கு ஒரு சந்தர்ப்பத்தை நீங்கள் கண்டுகொள்வீர்கள்.''

பெரும் இழப்புகளுக்குள்ளாகிய பின்னர் மார்ச் மாதம் 16 ஆம் திகதி ஹூசொங்நானின் துருப்பினர் யேனானுக்கு அண்மையிலுள்ள ஜின்பென்வான் மற்றும் நன்னிவான் ஆகியவற்றின் பண்படுத்தப்பட்ட பிரதேசத்தை வந்தடைந்தனர். யேனானிலுள்ள தனது அலுவலக நிலையில் இருந்து மார்ச் 18 ஆம் திகதி வரை மாஓ வெளியேறாதிருந்தார். யேனானின் வெளிப்புற எல்லையிலுள்ள ஷான்சிலிப்பு என்னு

கடைப்பிடித்தது. பிரதான படையணி போல் நடித்த ஒரு சிறிய கொம்யூனிஸ்ட் படைப்பிரிவு எதிரியுடன் மோதற்தொடர்பை ஏற்படுத்திவிட்டு வேகமாக உறுதியுடன் பின்வாங்கி எதிரியின் பிரதான படையை யேனானின் வடமேற்கிலுள்ள அன்சாய் என்னுமிடத்திற்கு இட்டுச் சென்றது. அதே நேரத்தில் கொம்யூனிஸ்டுகளின் பிரதான படையணி யேனானுக்கு வடகிழக்கே சிங்காபியன் என்னுமிடத்திற்குத் தென்புறமாக ஒன்று சேர்ந்து பதுங்கித் தாக்குதலை மேற்கொள்வதற்காக மறைந்து கொண்டது. ஹூசொங்நானின் இராணுவத்திற்குப் பக்கவாட்டுக் காப்பு வழங்கிய 31 ஆவது பிரிகேட்டின் தலைமைச் செயலகப் படைப்பிரிவும் 2,900 பேருக்கும் அதிகமான ஒரு ரெஜிமண்டும் மார்ச் 25 ஆம் திகதி கொம்யூனிஸ்ட் இராணுவத்தின் பொறிக்குள் மாட்டிக் கொண்டன. ஒரு மணித்தியாலச் சண்டைக்குப் பின்னர் அவர்கள் அனைவருமே அழிக்கப்பட்டனர்.

'' வடமேற்குப் போர் அரங்கிற்கான நடவடிக்கைளின் பொதுக் கோட்பாடு '' என்றொரு திட்டத்தை ஏப்ரல் மாதம் 17 ஆம் திகதி மாஓ சேதுங் வரைந்தார். அதில் அவர் பின்வருமாறு சுட்டிக்காட்டினார். '' எதிரி இப்பொழுது நன்றாகக் களைத்துப்போய் விட்டான். ஆனால் முற்றாகக் களைத்துப்போய் விடவில்லை. உணவு வழங்கலில் அவன் பெரும் சிரமங்களை எதிர் நோக்கியுள்ளான். ஆனால் அவன் கடுமையான சிரமங்களுக்கு உள்ளாகவில்லை. எதிரியை நன்றாகக் களைக்கச் செய்து அவனை முற்றுமுழுதாகப் பட்டினிக்குள்ளாக்காவிடில் நாங்கள் இறுதி வெற்றியை ஈட்டமுடியாது. இதை '' தேய்வும் சிதைவும் '' எனும் தந்திரோபாயம் எனக் குறிப்பிடலாம். எதிரியை முற்றாகக் களைக்கச் செய்து பின்னர் அவனைத் துடைத்தொழிப்பது என்று இது பொருள்படும்.''

சிங்காபியன் சமரில் கொம்யூனிஸ்ட் இராணுவம் எங்கிருக்கின்றது என்பதைக் கண்டுகொண்ட ஹூசொங்நானின் இராணுவம் உடனடியாகவே யேனானின் வடகிழக்கு நோக்கி விரைந்து கம்யூனிஸ்ட் இராணுவத்தைத் துரத்த ஆரம்பித்தது. பல்லாயிரக் கணக்கான வீரர்களைக் கொண்ட இந்த இராணுவம் யான்சுவான், சிங்யான், வேயோபோ பிரதேசங்களைச் சுற்றி வட்டமிட்டும், தனது இரையைக் கண்டுகொள்ள முடியவில்லை. ஏப்ரல் மாத நடுப்பகுதியில் பான்லொங்கிலிருந்தும் சிங்காபியனிலிருந்தும் தனது எட்டுப் பிரிகேட்டுகளை மேற்கு நோக்கியும்

வேண்டுமென்பதே அவரது குறிக்கோள். மீண்டும் தனது படையின் ஒரு பகுதியைப் பயன்படுத்திய கொம்யூனிஸ்ட் இராணுவம், எதிரியின் பிரதான படையணியை வடக்கு நோக்கிக் கவர்ந்திழுத்தது. அதே நேரத்தில், தனது நான்கு பிரிகேட்டுகளைத் தெற்கு நோக்கி அனுப்பி, பான்லொங்சென் என்னுமிடத்திலுள்ள எதிரியின் பிரதான வழங்கல் தளத்தின் மேல் திடீர்த் தாக்குதல் மேற்கொள்ளும்படி பணித்தது. மே மாதம் 2ஆம் திகதி பான்லொங்சென் மீது தாக்குதலை மேற்கொண்ட அந்த நான்கு பிரிகேடுகளும் இரண்டு பகலும் இரண்டு இரவும் நடைபெற்ற சமரில் எதிரியின 6,700 துருப்புகளைச் செயலிழக்கச் செய்தன.

மே மாதம் 2-4 வரை: 6,700 பேரைக் கொண்ட எதிரியின் ஒரு தலைமைச் செயலகப் படைப பிரிவும், ஒரு ரெஜிமெண்டும் முற்றாக அழிக்கப்பட்டன.

மே 30 - யூன் 30 வரை: மாகொங்கியின் 4,400 வீராகள் துடைத்தொழிக்கப்பட்டனர்.

ஓகஸ்ட் 6-11 வரை: யூடினின் வெளிப்புற எல்லையைக் காவல் செய்த 5,200 எதிரித் துருப்புக்கள் அழித்தொழிக்கப்பட்டன.

ஓகஸ்ட் 20 இல்: மிஸ்கிக்கு வடகிழக்கில் உள்ள ஷயாடியன் பிரதேசத்தில் 6,000க்கும் அதிகமான எதிரித்துருப்புககள துடைத்தொழிக்கப்பட்டுள்ளன.

ஷான்சி - கன்சு - நிங்சியா எல்லைப் பிராந்தியத்திலுள்ள பிரதான இடங்களுக்கெதிரான ஹூசொங்நானின் தாக்குதல்கள் எல்லாம் ஏழு சமர்களில் முற்றாகத் தோற்கடிக்கப்பட்டன.

ஒரு வருடத்திற்கும் சற்று அதிகமான காலத்தில் 100,000 பேரை இழந்த ஹூசொங்நான் யேனானிலிருந்து பின்வாங்க வேண்டியதாயிற்று. மாஓவின படைகள் மீண்டும் யேனானுக்கு திரும்பிச்செல்ல முடிந்தது. யேனானை மீளக்கைப்பற்றிய பின்னர் உண்மையில் மாஓ சேதுங் ஓர் அரசரைப் போலவே திகழ்ந்தார். ○

# விதையும் விருட்சமும்

**மே** 05, 1976.

தமிழீழ சரித்திரத்தில் ஒரு பொன்னான நாள்.

ஈழத் தமிழினம் தலைநிமிர்ந்து தன் மானத்துடன் வாழ, ஒரு தேசிய விடுதலை இயக்கம் உதித்த நாள்.

அதுதான் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பிறந்தநாள்.

1971 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் – தனது 17 ஆவது வயதில் – தமிழினத்தின் சுதந்திரத்திற்காக தலைவர் பிரபாகரன் போராட்டக் களத்தில் இறங்கியிருந்தார். ஆரம்பத்தில் 'தமிழ் மாணவர் பேரவை' என்ற அமைப்பில் இணைந்து, சிங்கள ஆட்சியாளர்களுக்கு எதிராகத் தீவிர அரசியலில் ஈடுபட்டார். அந்தக் காலத்தில் அடுத்தடுத்துத் தோல்வியில் முடிந்த மாணவர் பேரவையின் ஆயுதச் செயற்பாடு, அந்த அமைப்பினுடைய தலைமையின் தயக்கமான நடவடிக்கைகள் மற்றும் குறைபாடுகள் - இவற்றிற்கான காரணிகள் என்பவற்றையெல்லாம் பட்டறிவின் மூலம் கண்டுகொண்ட தலைவர் பிரபாகரன், ஒரு இறுக்கமான இராணுவ அமைப்பைப்பற்றித் தீவிரமாகச் சிந்திக்கத் தொடங்கினார்.

அதன் விளைவாக 1972 ஆம் ஆண்டின் பிற்பகுதியில், 'புதிய தமிழ்ப் புலிகள்' என்ற அமைப்பைத் தோற்றுவித்தார். இது குழுநிலையில் இயங்கியபடி சில ஆயுத நடவடிக்கைகளில் ஈடுபட்டபோதும், உறுதியான கட்டுப்பாடுகளோ தியாக சிந்தனைகளோ இல்லாது இருந்தது; அத்துடன் இதன் அங்கத்தவர்களில் பலர் ஒழுக்கவீனமாகவும் செயற்படமுனைந்தனர். இவ்வமைப்பைச் சீர்திருத்தி, ஒரு முழுமை பெற்ற - மக்களால் மதிக்கப்படக்கூடிய - விடுதலைப் போராட்ட அமைப்பாக மாற்றத் தலைவர் முயன்றார்.

உறுதியும், அர்ப்பண உணர்வும் ஒழுக்கக் கட்டுப்பாடுகளுக்குக் கீழ்ப்படியக்கூடிய ஒழுக்கசீலர்களையும் வடிகட்டித் தேர்ந்தெடுத்து, அவர்களை வைத்து முழுமைபெற்ற ஒரு தேசிய விடுதலைப் போராட்ட அமைப்பைக் கட்டியெழுப்பத் தலைவர் முடிவெடுத்தார்; அதற்கு முனனர், வெற்றிகரமான ஒரு இராணுவ நடவடிக்கையைச் செய்ய விரும்பினார். அதற்கொரு காரணம் இருந்தது.

அதாவது 'மாணவர் பேரவையின்' ஆயுதச் செயற்பாடுகள் படுதோல்வியடைந்ததால், ஆயுதப் போராட்டம் தொடர்பாக தமிழ் இளைஞர்கள் மத்தியில் ஓர் அவநம்பிக்கை குடிகொண்டிருந்த காலம் அது. எனவே, ஆயுதப் போராட்டத்தின் மூலம் விடுதலை பெறலாம் என்ற நம்பிக்கையை மக்களுக்கு வழங்கிய பின்னர் அமைப்பை புனரமைப்பதே சிறந்தது என்று, தலைவர் எண்ணினார். ஆனாலும், இத்தகையதொரு தாக்குதலுக்குத் தேவையான முன்னேற்பாடுகளில் ஈடுபடவும், போராளிகளின் அன்றாடத் தேவைகளை நிறைவேற்றவும் தேவையான பணம் அவர்களிடம் இருந்திருக்கவில்லை. அன்றைய காலகட்டத்தில் போராட்டச் செயற்பாடுகளுக்குத் தேவையான பணத்தை, அரச நிறுவனங்களிலிருந்து ஆயுத முனையில் எடுப்பதுதான் வழமையாக இருந்தது. ஆனால் தலைவர் இதை விரும்பவில்லை. ஏனெனில், அக்காலத்தில் குழுநிலையிலும் தனித்தும் பல இளைஞர்கள், எதுவித கட்டுப்பாடுகளும் இன்றி, போராட்டத் தேவைகளைக் கூறிக்கொண்டு பரவலாக கொள்ளைகளில் ஈடுபட்டனர். இது மக்களுக்கு வெறுப்பையும் - சலிப்பையும் தந்தது. இதனால் உண்மையான போராட்ட சக்திகள் மீதும் மக்கள் சந்தேகம் கொள்ளத் தொடங்கினர்.

எனவேதான், முதலில் வெற்றிகரமாக ஒரு இராணுவ நடவடிக்கையைச் செய்து எம்மை இனங்காட்டி, அதேசமயம் மக்களின் அபிமானத்தையும் பெற்றுக்கொண்டு, போராட்டச் செயற்பாட்டுககுத் தேவையான பணத்தை ஒரு அரச வங்கியிலிருந்து எடுப்பது என்று தலைவர் முடிவெடுத்தார். அதுவரைக்கும் தனது சொந்தப் பணத்திலும், தனிப்பட்ட சிலரிடமிருந்து கடனாகப் பெற்ற பணத்திலும், சகபோராளிகள் சிலரது தனிப்பட்ட பணத்திலும் மிகவும் சிககனமாகவும் – தியாக சிந்தனையுடனும் இயக்கப் போராளிகளை வழிநடாத்தினார்.

1975 ஆம் ஆண்டு யூலை 27 ஆம் திகதி துரையப்பா மீதான தாககுதல் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது. துரோகி ஒழிந்தான் என மக்கள் மகிழ்ந்தனர். அத்துடன் இந்தத் தாக்குதலில் காட்டப்பட்ட துணிவும், இராணுவத் தேர்ச்சியும், எல்லாவற்றிற்கும மேலாக வெற்றியும தமிழ் இளைஞர்களின் கவனத்தை ஈர்த்தன. மககள் எலலாருமே இந்தத் தாக்குதல பற்றியும்



அதைச் செய்த போராளிகள் பற்றியும், வியப்புடனும், தன்னம்பிக்கையுடனும் பேசிக்கொள்ளத் தொடங்கினர். இந்த நிலையில், ஏற்கெனவே தீர்மானித்தது போல, பலவந்தமாகப் பணத்தைப் பெற்றுப் போராட்ட நடவடிக்கைககளைத் தொடரத் தலைவர் தீர்மானித்தார். தலைவரின் தலைமையில், புத்தூர் மக்கள் வங்கியில் இருந்து ஆயுத முனையில் பணம் எடுக்கப்பட்டது.

ஆயுதப் போராட்டத்தின் மூலம் சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்ள முனையும் ஒரு தேசிய விடுதலை இயக்கத்திற்குரிய உறுதியான கொள்கைத் திட்டங்கள், கட்டுப்பாடுகள், சட்டதிட்டங்கள், தந்திரோபாய நடைமுறைகள், மக்களை அணிதிரட்டும் மார்க்கங்கள் என்பவற்றையெல்லாம் தீர்கக தரிசனத்துடன் சிந்தித்து வகுத்துக்கொண்ட தலைவர் பிரபாகரன், அப்புதிய புரட்சிகர விடுதலை இயக்கத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்று, போராளிகளைக் களத்தில் நேரடியாக வழிநடாத்தி, ஆயுதப் போராட்டத்தை உறுதியுடன் வெற்றிகரமாக முன்னெடுக்கத் தொடங்கினார்.

இவ்விதம் எழுபதுகளின் ஆரம்பத்தில் தெளிவான இலககின்றியும், தகுதியான தலைமையின்றியும் தள்ளாடிய ஆயுதப் போராட்டம், படிப்படியாக வளர்ச்சி கண்டு, 1976 மே 5 ஆம் திகதி, முழுமை பெற்ற ஒரு தேசிய விடுதலை இயக்கமாகப் பரிணமித்தது.

இந்த விடுதலை இயக்கம் ஆரம்பத்தில் இனத்துரோகிகளின் கொட்டங்களை அடக்கி, தமிழீழ மக்கள் மத்தியில் ஒரு தலைமறைவு ஆயுதப்போராட்ட அமைப்பிற்கான உறுதியான அடித்தளத்தை இட்டது.

அதன்பின் சிங்களப் பொலிசாரை, பொலிஸ் நிலையங்களைத் தாக்கி அழித்து, எஞ்சியவற்றை மூடச்செய்து, சிங்கள அரசின் சிவில் நிர்வாகத்தை வடதமிழீழத்தின் பெரும்பகுதியில் நடைமுறைப்படுத்த விடாது தடுத்தது. இதனால், சிங்கள அரசின் சட்டதிட்டங்களுக்கு அஞ்சாது மக்கள் போராளிகளுக்கு ஆதரவு அளிக்கத் தொடங்கினர்; போராட்டத்தில் இணையத் தொடங்கினர். போராட்டச் செயற்பாடுகள் மெது மெதுவாக வளரத்தொடங்கின.

மாணவர் பேரவையின் வெற்றி பெறாத செயற்பாடுகளிலிருந்து பெற்ற பட்டறிவின் பின், தலைவர் பிரபாகரன் தானே தனி இயக்கம் அமைத்து – தானே திட்டமிட்டு – தலைமைதாங்கி நடாத்திய ஒவ்வொரு தாக்குதலின்போதும், களத்திலிறங்குபவர்கள் அனைவருக்கும் போதிய பயிற்சிகளையும் ஆலோசனைகளையும் கொடுத்து, தாக்குதலுக்கான ஒத்திகைகளும் பார்த்து வெற்றிபெறலாம் என்ற உறுதியான நிலையை ஏற்படுத்திக் கொண்டே களத்தில் இறங்கினார்.

விடுதலைப் புலிகள் இயக்கம் களத்தில் இறங்கிய முதல் ஏழு ஆண்டுகளில் (1982 வரை) 15 இற்கும் மேற்பட்ட தாக்குதல்களை வெற்றிகரமாக நடாத்தியது. அவற்றின் போது ஒரு போராளியைத்தானும் இழக்காது, ஆயுதங்களையும் பறிகொடுக்காது, பகைவர் தரப்பில் 13 படையினரையும், மூன்று இனத்துரோகிகளையும் அழித்ததுடன் எதிரியிடமிருந்து 50 ஆயுதங்களையும் கைப்பற்றியது.

ஏழு ஆண்டுகளின் பின்னர்தான் 1982 ஆம் ஆண்டு நொவெம்பர் 27 ஆம் திகதி, தனது முதலாவது போராளியை (லெப். சங்கர்) இயக்கம் இழந்தது. அதே போல், முதல் பத்து ஆண்டுகள் (1985 ஜனவரி 9 ஆம் திகதி) வரை, தனது ஆயுதம் எதையும் இயக்கம் எதிரியிடம் இழக்கவில்லை.

இதேவேளை "விடுதலைக்கு உழைக்கின்றோம்" எனக் கூறிக்கொண்டு விடுதலைப் புலிகள் இயக்கத்திற்குப் பின் தொடங்கப்பட்ட குழுக்கள் எல்லாம், விடுதலை என்ற குறிக்கோளைக் கைவிட்டதுமல்லாமல், தமிழினத்திற்கும் விடுதலை என்ற இலட்சியத்திற்கும் துரோகிகளாக மாறிவிட்ட நிலையிலும், பல குழுக்கள் உதிரிகளாக உதிர்ந்து விட்ட நிலையிலும் விடுதலைப் புலிகள் இயக்கம் மட்டும் பெரு விருட்சமாக வளர்ந்து கிளை பரப்பி நிற்கின்றது, இதன் நிழலில் – இதன் பாதுகாப்பில் – தமிழீழ தேசியம் வளர்ந்து பலம் பெற்று வருகின்றது.

இருபது ஆண்டுகளுக்கும் மேற்பட்ட புலிகளின் போராட்ட வரலாற்றில் 'இன்று' அது, இரண்டாவது தலைமுறையைக் கண்டுவிட்டது - தலைவர் பிரபாகரன் போராட்டத்தில் குதித்ததற்குப் பின் பிறந்தவர்களே இன்று பெருந்தொகையில் இயக்க உறுப்பினர்களாக இருக்கின்றனர்.

7500 இற்கும் மேற்பட்ட புலிவீரர்கள் தம் இன்னுயிர்களை ஈந்து, எவராலும் அசைக்கமுடியாத எஃகுக் கோட்டையாக விளங்கும் புலிகள் இயக்கத்தின் அடித்தளம், தலைவர் பிரபாகரன் அவர்களின் தன்னலமற்ற – தெளிவான - உறுதியான செயற்பாடுகளின் மூலமே ஏற்படுத்தப்பட்டது. இப்பேரியக்கத்தின் ஒவ்வொரு அங்குல வளர்ச்சியிலும், போராட்டத்தின் ஒவ்வொரு படிவளர்ச்சியிலும், தலைவரின் பங்களிப்பே பிரதானமாக இருந்து வருகின்றது. அதனால்தான் தலைவர் மீதும், அவரின் திறமை மீதும், இயக்கத் தோழர்கள் அசையாத நம்பிக்கையை, பற்றை வைத்திருக்கின்றனர்.

கட்டுப்பாடும் அர்ப்பண உணர்வும் கொணட ஒரு விடுதலை இயக்கத்தின் தலைவனாக – தளபதியாக இருந்த பிரபாகரன் இன்று தமிழீழ விடுதலையின் சின்னமாகவும், தமிழீழ தேசியத் தலைவனாகவும் உயர்ந்து காணப்படுகின்றார். O

# புலிகள் சேனை கொடிகள் ஏற்றும் தலைவன் பாதை விடியல் காட்டும்

எம் ஊரெங்கும் உயர்ந்துள்ள கற்பக விருட்சங்களே!
கண்திறவுங்கள்,
வீசும் காற்றுக் கெல்லாம் தலையசைத்துத்
தாளம் போடுவதை நிறுத்தி 'சக்தி' பெறுக.
உரம் பெற்ற வைர உடல்வாகும்
குனியோமெனும் வரலாறும்
உமக்குண்டு
பகைவனுக்கிதனை உணரச் செய்வீர்.
கோடிபனைகள் நிமிர்ந்த தேசமிது.
குலையாதெம் மனவுறுதியென
வடலிகளும் வரிசை கொள்க.
புயலுக்கும் அசையா எம் பனைகளே!
தமிழர் தேசத்துத் தருக்களே!
'கருக்குவாளேந்திக்' களத்திலிறங்குக.
ஊர் புகுந்த பகையே!
உனக் கொன்றுரைப்போம் கேள்.
வேட்டை நாயென விரட்டி
சுடுகுழல் வேலியாய்ச் சுற்றி வளைத்துக்
கூட்டுக்குள்ளே இழுத்துச் சென்றாய்.
ஒப்புதலின்றி உள்ளே கொண்டு சென்றாயே!




- வியாசன்

இவர்கள் அப்பாவிகளல்லர்...
அமுக்க வெடிகள்.
கோரப்பற்களின் குரூரம் அறியாது
உன் பாதத்தில் வந்து பணிந்தனராம் சிலர்
இவர்களுன் விசுவாசிகளல்லர் —
அடிவருடிகள்.
சாகும்வரை சிம்மாசனம் தனக்கென்றிருப்போர்.
ஆங்கிலேயர் காலத்திலிருந்தே அடங்கிப்போகும்
பயிற்சியெடுத்த பரம்பரையினர்.
நீ நச்சு விளக்கு கென்பது
அந்த விட்டில்களுக்கு விளங்கவில்லை.
வெண்தாமரை மலர்கள்
ஆரிய குளத்திலும் பூத்துளதாமே,
நீளக் கயிற்றில் கால்களைக் கட்டி
ஆட விட்டுள்ளாய்.
பெருவாழ்வு கைவரப் பெற்றதாய்
எம்மிற் சிலர் பொச்சடிக் கின்றனர்.
உன்னை
நச்சுப் பற்கள் கழற்றிய நாகபாம்பென நம்பி
எம்மிற் சிலர்
தொட்டு விளையாடவும் தொடங்கி விட்டனராம்
''ஆமிக்காரன் நல்லவன்''
''இப்படி இருப்பானெனத் தெரிந்தால்
எப்போதோ வந்திருக்கலாம்''
''அன்பாகப் பழகினால் —
அவனும் மனிதன் தானே''
காற்றோடு காற்றாகக் கலந்து
இந்தக் கதைகளும் எழுந்து வருகின்றன.
விடுதலையின் விலாசமறியாது
இன்னும் சிலர் எம்முள்ளே இருக்கலாம்.
வீட்டுக்குத் திரும்புவதே விடுதலையென்று
வந்துன் வாசலில் வரிசையில் நிற்கலாம்.
புராதன வாழ்வின் பெருமை அறியாது,
நிவாரண வரிசையில் நிற்பதே தொழிலென
எட்டியுதைக்கும் கால்களுக்கு முத்தமிட்டபடி
'புத்திஜீவிகள்' சிலர் உன்னைப்பார்த்து புன்னகைக்கலாம்.
சிங்கக் கொடியை நீயேற்றும் போது
நந்திக் கொடியேற்றவும் நாலுபேர் இல்லாமலா போய்விடும்?
'' கும்பிட்டு வாழமாட்டோம் '' எழுதிய கவிஞன்
உள்ளே வந்துள்ளான்.
கூப்பிட்டழைத்துக் கொடியை ஏற்றுக,
'' வானம் எம் வச'' மென்று வாழ்த்துப் பாடிய சிலரை
இங்கே காணவில்லை.

சந்தக் கவிஞர்களல்லவா !
உனக்கு வந்தனம் பாட வந்திருப்பார்கள்.
வாசலில் நிற்க வைக்கவும்.
சாமரம் வீச இவர்களே தகுதியானவர்கள்.
'குவேனி'யின் பிள்ளைகளுக்குக் குற்றவேல் செய்ய
'காட்டாற்று' வேகக் கதைகாரன்
வீட்டுக்கு வந்துள்ளார்.
பதவியுயர்வுக்காக உனக்குப் பாதபூசை செய்வார்.
பழைய பேப்பர் வழங்குக.
அவர் பாடநூல் அச்சிடட்டும்.
' தங்கதேவன் ' எங்கே?
வந்திருப்பார் உங்கே.
புனைமைப்புக்குப் பொருத்தமானவர்.
வரைபடம் கீற வைத்திருக்கவும்.
புத்தக வெளியீட்டு விழாவில் பேசுதற்கு—
ஆட்களில்லையென்ற கவலையுனக்கழிந்தது.
பட்டிமன்றம்
கவியரங்கு
சொற்பொழிவு
அரங்கேற்றம்
திருவிழா காலத்துத் திருவூஞ்சற் பாட்டு,
எல்லாவற்றுக்கும் பொருத்தமானவர் உள்ளே வந்துளர்.
ரோச நரம்பை அறுத்தெறிந்துவிட்டு
பேசவரக் கூடியவர்.
உத்தரியச் சால்வை ஒன்று கொடுத்தால் போதும்
பத்துத் தலைப்பில் பட்டிமன்றம் நடத்துவர்.
பகையுடன் இனி உறவில்லையென்று பாடியவர்களே!
உமக்கு என்ன நடந்தது?
உள்ளி கண்ட இடத்தில் பிள்ளைபெறும் வித்தையை
உமக்குச் சொல்லித்தந்தது யார்?
பொழுதெல்லாம் பொய்யாக இருந்துவிட்டா
வலிகாமம் புகுந்தீர்?
உள்ளே செல்ல வரிசையில் நின்ற சிலர்
வெளியே வந்தவரைப் பார்த்து விசிலடித்தார்களாம்.
''பாட்டுக் கேட்கலாம்,
படம் பார்க்கலாம்.
தடுப்பாரின்றித் தண்ணியடிக்கலாம்...''
என்றபடி சிலர் சென்றாராம்
வெட்கம் கெட்டதுகளுக்கு எப்படி விடுதலை விளங்கும்.
பற்றியெரிந்த நெருப்பிற் குளித்து,
சுற்றி வளைப்பில் சிக்குண்டு,
வன்னிக்கு வரும் வழிகள் அடையுண்டு,
விழிசிந்தி அழுதபடி
உள்ளே சென்றவரே அதிகம்.
வடமராட்சியிலிருந்து ஓடிவந்து
கொடிகாமத்தில் வரிசையில் நின்று
உள்ளே போனதுகளும் உண்டு.
புலிகளின் கதை முடிந்து போனதென்றா
பகைவனோடு வலிகாமம் போனீர்.
எனக்கும்,
என் பிள்ளைக்கும்,
முடியுமானால் உறவுக்கும்
எண்பது வயது வரை எதுவும் நடக்காமல்
காலம் கழிந்தால் அதுவே போதும்.
விடுதலையென்ன விடுதலை.
யாருக்கது வேண்டும்?
பாலும், பழஞ்சோறும், பாணும் பருப்புமிவை
நாலும் கிடைக்குமெனில் நமக்கதுவே போதும்.
என்றெண்ணிப் போனவருக்கு
ஒன்றுரைப்போம்.
அடிமைத் தனத்தை அற்புதமென்று
பதிகம்பாடிப் பல்லாக்கில் சுமக்கவா
அதிகம் விரும்பினீர்?
அடிக்கடி நாக்கு வழித்துக் கொள்ளுங்கள்
உங்களில் உப்பு உறைக்கட்டும்.
விரைவில் எம்மூருள் வருவோம்.
இரவு, இரவாக நீள்வதில்லையே!
காலைப் பொழுதைக் கைகளில் தந்துவிட்டு
இரவு கரைந்து கொள்ளும்.

தமிழர் தேசம் பணிந்திடாது!
தலைவன் இருக்கத் தளர்ந்திடாது!
எனநினைந்து எழுக துணிந்து!
எதிரி சேனை எரியும் அழிந்து!
புலிகள் சேனை கொடிகளேற்றும்.
தலைவன் பாதை விடியல் காட்டும்.

# குடாநாட்டுக்கான தரைப்பாதை சிங்களப் படைக்குச் சாத்தியமா?




**குடாநாட்டுப் படையெடுப்புகள் பூர்த்தியாகி விட்டநிலையில், குடாநாட்டுக்கான தரைப்பாதை ஒன்று வன்னிப்பெருநிலப் பரப்பினூடு திறக்கப்படுவது பற்றிச் சிங்களத் தரப்பு பேசிவருகின்றது. இது தொடர்பாக வன்னியில் வாழும் மக்கள் மத்தியில் பல்வேறு ஊகங்களும், ஐயப்பாடுகளும் எழுகின்றன. அவர்களுக்கு விளக்கமளிக்கும் பொருட்டு இந்தப் பகுதி எழுதப்பட்டுள்ளது.**

வலிகாமச் சமர் முடிந்த ஒரு சில நாட்களின் பின்னர், குடாநாட்டிற்கான தரைப்பாதை ஒன்று திறக்கப்படும் என்று, சந்திரிகா அம்மையார் அவர்களும்-ரத்வத்த அவர்களும் அறிவிப்புச் செய்திருந்தனர். ஆனால், அவ்விதம் எதுவும் நடைபெறவில்லை. தென்மராட்சியின் சில பகுதிகளைக் கைப்பற்றிய பின்னர் -இப்போதும் அதே பாதைதிறப்பு அறிவிப்பை ரத்வத்த அவர்கள் செய்துள்ளார்.

குடா நாட்டிற்கான தரைப்பாதை பற்றிய சிங்கள அரசின் எண்ணக்கருவும் - வலிகாமச் சமரும் உண்மையில் பிரிக்க முடியாதவை. வலிகாமச் சமரைப் படையினர் வென்றபின் - அடுத்த கட்டமாக - நடைமுறைப்படுத்தவெனத் திட்டமிடப்பட்டிருந்த ஒரு இராணுவ நடவடிக்கையே தரைப்பாதை திறப்பு முயற்சியாகும்.

வலிகாமச் சமரின் இறுதியில் புலிகள் இயக்கத்தின் அரைப் பங்கு வரையான இராணுவபலம் அழிக்கப்பட்டுவிடும் என்றே திரு. ''அனுருத்தரத்வத்த நம்பியிருந்தார். மூவாயிரம் புலிகள் கொல்லப்பட்டுள்ளனர். ஐயாயிரம் புலிகள் காயமடைந்துள்ளனர்'' என, ''சூரியப்பிரகாசம் - 1'' முடிவடைந்த பின்னர் அவர் வெற்றி முழக்கமிட்டது குறிப்பிடத்தக்கது.

**விநியோகம் தடைப்படுமானால் குடாநாட்டுப் படைகளின் எதிர்காலம் சூனியமாக மாறும்!**

(உண்மையில் 497 புலிவீரர்கள் வீரச்சாவடைந்தனர். சுமார் 1000 பேர் வரையில் விழுப்புண் அடைந்திருந்தனர்) ரத்வத்தவின் அறிவிப்பு வெறும் வாய்ச்சவடாலாக அமைந்திருந்ததல்ல; யாழ்ப்பாணச் சமரைத் திட்டமிட்டபோதே சிங்களத் தளபதிகள் செய்த இராணுவக் கணிப்பீடு அது. அவர்கள் கணித்ததுபோல அவ்வளவு தொகைப் புலிவீரர்கள் உயிரிழந்திருந்தால், குடா நாட்டிற்குத் தரைப்பாதை அமைத்தல் என்பது, சிலவேளை- படையினருக்கு சாத்தியமான ஒன்றாக இருந்திருக்கலாம்.

ஆனால், சிங்களத் தளபதிகள் எதிர்பார்த்ததுபோல வலிகாமச் சமர் புலிகளை நசுக்கவில்லை. இராணுவ ஆய்வாளர்களே ஆச்சரியப்படும் அளவுக்கு, புலிகள் வலிகாமச் சமரில் வேறுபட்ட போர்த் தந்திரோபாயங்களையும், வித்தியாசமான தீர்மானங்களையும் எடுத்து - சமரை விவேகமான முறையில் எதிர்கொண்டிருந்தனர். ''சூரியப்பிரகாசம் 2'' இராணுவ நடவடிக்கைமூலம் மேலும் ஒரு தொகுதிப் புலிகளை அழித்து, பாதை திறத்தல் என்ற செயன்முறையைச் சாத்தியமானதாக்க ரத்வத்த முயன்று பார்த்தார். அதிலும் சிங்களப்படைக்கு பெரிய நன்மைகள் கிடைக்கவில்லை. இரண்டு இலட்சம் மக்களைப் படையினர் 'மீட்டு' விட்டனர் என்று பிரச்சாரம் செய்யவே ''சூரியப்பிரகாசம் - 2'' அரசுக்கு உதவியுள்ளது. எனினும், குடாநாட்டிற்கான தரைப்பாதை திறக்கப்படும் என்றே மீண்டும் மீண்டும் ரத்வத்த கூறிவருகின்றார்.

புலிகளின் இராணுவ பலத்தைப் பெருமளவுக்குச் சிதைக்காமல் பாதைதிறத்தல் என்பது, அலை எறியும் சமுத்திரத்திற்குள் கட்டுமரத்திற் செல்வதற்கு ஒப்பானதாக அமைந்துவிடும் என்ற அச்சமும் சிங்களத் தளபதிகளிடம் இருக்கின்றது. அதேவேளை, தமது இராணுவ பலத்தைச் சிதைக்கப் புலிகள் இயக்கம் களம் அமைத்துக்கொடுக்காது என்பதும் பலரும் அறிந்த உண்மை.

ஆகவே, புலிகளின் இராணுவ பலத்தைச் சிதைக்கும் நோக்குடன் - வன்னிப் பகுதியில் - இன்னும் சில இராணுவ நடவடிக்கைகளைப் படையினர் செய்துபார்க்கச் சந்தர்ப்பங்கள் உள்ளன. அத்தகைய இராணுவ நடவடிக்கைகள் யாருக்கு நன்மையைப் பெற்றுக்கொடுக்கப்போகின்றன என்பதை இப்போது எதிர்வு கூறுவது கடினம்.

தரைப்பாதை திறத்தல் என்ற இராணுவக் கொள்கையில், அரசு விடாப்பிடியாக இருந்து வருவதற்கு ஒரு முக்கிய காரணம் உண்டு. குடாநாட்டில் நிலைகொண்டுள்ள சுமார் ஐம்பதாயிரம் படையினருக்கான விநியோகங்களை மேற்கொள்வதில் இன்றிருக்கின்ற பிரச்சினைகளைத் தீர்க்க அரசுக்கு ஒரு தரைப்பாதை அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்றது.

அத்துடன், இப்போது, சுமார் இரண்டு இலட்சம் மக்களைத் தமது இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிக்குட் படையினர் கொண்டுபோய் உள்ளனர். இவர்களிற்கான அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றிவைக்க வேண்டிய பொறுப்பிலும் அரசே உள்ளது.

மக்களுக்கான விநியோகம் என்ற போர்வையிற் தனது இராணுவ விநியோகங்களையும் செய்துவிட மேற்கொள்ளும் இராணுவதந்திரோபாயத்திற்குப் புலிகள் இயக்கம் இடங்கொடுக்கமாட்டாது.

எனவே, தனது படைப்பலத்தைப் பயன்படுத்தியே குடாநாட்டுக்கான விநியோகங்களை அரசு மேற்கொள்ள வேண்டும். குடாநாட்டு நிலப்பரப்பின் கணிசமான பகுதியைப் புலிகள் இயக்கம் இழந்தாலும்கூட தமிழீழக் கடற்பரப்பில் புலிகள் வைத்திருந்த கடலாதிக்கத்தைச் சிங்கள அரசால் தடுத்துவிடமுடியவில்லை. காங்கேசன் துறைமுகத்திற்கான கடற் போக்குவரத்தை அரசு இப்போதும் நடாத்துகின்றது என்பது உண்மை. ஆனால், தேவையை ஈடுசெய்யும் அளவுக்கு கடல்வழி விநியோகம் நடைபெறவில்லை. அந்தளவுக்கு கடற்போக்குவரத்து அரசுக்குக் கடினமான ஒன்றாகவும் - ஆபத்து நிறைந்ததுமாகவே இன்று உள்ளது. இந்த நிலையில் பாதுகாப்பான தரை வழிப்பாதை ஒன்றால் மட்டுமே குடாநாட்டுப் படையினரின் தேவையை ஈடுசெய்ய முடியும் என்ற யதார்த்தத்தை அரசும் உணர்ந்தே உள்ளது. அத்துடன், குடாநாட்டில் படையினர் இப்போது நிலைநிறுத்தி உள்ள இராணுவ மேலாதிக்கத்தைத் தொடர்ந்து பேணவேண்டுமாயின் குடாநாட்டிற்கான தரைப்பாதை ஒன்றைப் படையினர் வெற்றிகரமாகத் திறக்காதுவிடின் குடாநாட்டுப்படையின் எதிர்காலம் சூனியமானதாகவே இருக்கும்.

இந்தக் கயிறு இழுத்தற் போட்டியின் வெற்றி - தோல்வியிலே, போராட்டத்தின் திருப்புமுனைக்கட்டத்தையும் காணமுடியும்.

குடாநாட்டிற்குத் தரைப்பாதை அமைத்தல் என்ற விடயம் வரும்போது எங்கிருந்து? எதற்கூடாக? எதுவரை? என்ற கேள்விகளும் எழுகின்றன

குடாநாட்டிற்கான விநியோகப்பாதை அமைப்பு என்பது மூன்று வழிகளை மட்டுமே கொண்டுள்ளது. ஒன்று, வவுனியாவில் இருந்து மாங்குளம், கிளிநொச்சி ஊடாக ஆனையிறவை அடைதல். இரண்டு ஆனையிறவில் இருந்து முல்லைத்தீவு, கொக்கிளாய் ஊடாகத் திருகோணமலை வரையுள்ள கரையோரப் பகுதியை கைப்பற்றி, தரைவழியாகவோ அல்லது கடல்வழியாகவோ பாதைதிறத்தல். மூன்று, பூநகரியில் இருந்து தள்ளாடி முருங்கன் ஊடாக கற்பிட்டி அல்லது, மதவாச்சியுடன் ஒரு கடற்பாதையை அல்லது, தரைப்பாதையை அமைத்தல்.

இதில் எந்தப் பாதையை எடுத்துக்கொண்டாலும் 100 கிலோ மீற்றருக்கும் குறையாத அளவு நீளத்தைப் - படையினர் புதிதாகக் கைப்பற்றவேண்டும். அப்படியாயின் இந்தளவு நீளத்தையும், நான்கு - ஐந்து கி.மீ அகலத்தையும் கொண்டதாகப் பாதை அமைக்கப்படவேண்டிய அந்தப் பணிக்கு எத்தனை ஆயிரம் துருப்புக்கள் தேவைப்படுவர்; இது சாத்தியமா?

விநியோகப்பாதையைத் திறப்பதற்கு ஒரு பாரிய இராணுவ நடவடிக்கை வேண்டும். திறக்கப்பட்ட பாதையைத் தொடர்ந்து பாதுகாத்தபடி, அதற்கூடாக விநியோகங்களை வெற்றிகரமாக, மேற்கொள்வதற்கு, பிரமாண்டமான ஆட்பலமும் பொருளாதாரமும் தேவை. முதற்கட்டத்தைச் சிலவேளை அரசு முயன்று பார்க்கக்கூடும். ஆனால் இரண்டாவது கட்டத்தைப்பற்றி, அரசு, கற்பனை பண்ணிப்பார்க்கவே முடியாதிருக்கும். ஆனாலும், சந்திரிகா - ரத்வத்த அரசு சும்மா இருக்கப் போவதில்லை. குடாநாட்டுப் படையின் வாழ்வு அதற்கான விநியோகத்திற் தான் தங்கியுள்ளது. குடாநாட்டுப் படையின் விநியோகப் பிரச்சினையை ஏதோ ஒரு வழியிற் தீர்த்துவைக்க அரசு முயலும் என்று எதிர்பார்க்கவேண்டும்; அந்த வழி எது?!

அதை எப்படி சாத்தியமானதாக்கப் போகின்றது? என்பதை அரசு ஆராய்ந்து முடிவெடுக்கலாம்.

ஆனால் எதை அரசு செய்தாலும் - அதை முறியடிக்கப் புலிகள் ஒரு போர்யுக்தியை உருவாக்குவர் என்பது திண்ணம். O

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**